பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 229

திங்கட்கிழமை
13 ஜூலை 2026

ஆனி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தமிழரசுக் கட்சி உள்ளடங்கலாக

# தமிழ்க் கட்சிகள் புதிய கூட்டணி!

கொழும்பு, ஜூலை 13

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலில் சிறுபான்மையின மக்களின் குரலை வலுப்படுத்தும் நோக்கில், தமிழரசுக் கட்சி உள்ளிட்ட பிரதான ஆறு தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டணியாகச் செயற்படவுள்ளன. தமிழினம் சார்ந்த பொதுவான விடயங்களில் ஒன்றிணைந்து செயலாற்றுவதற்காக உருவாகவுள்ள இந்தக் கூட்டணிக்கான புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இன்று திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ள விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போது இந்தக்கட்சிகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளன.

»14

## காலநிலை மாற்றத்தில் அவதானம் அவசியம்!



### சஜித் அறிவுரை

கொழும்பு, ஜூலை 13

"காலநிலை மற்றும் வானிலை மாற்றங்கள் குறித்து இந்த அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும். அது வெறும் சுற்றாடல் விவகாரம் மட்டுமல்ல; அது நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை, உணவு,நீர்ப்பாதுகாப்பு மற்றும் தேசியப் பாதுகாப்புடன் நேரடியாகத் தொடர்புடைய ஓர் அத்தியாவசியக் கடமையாகும்"

»14

## 2027 க்கான பட்ஜெட் நவம்பரில் சமர்ப்பிப்பு!

கொழும்பு, ஜூலை 13

இலங்கையின் 2027ஆம் நிதியாண்டுக்கான அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் எதிர்வரும் நவம்பர் மாதம் 12ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதற்கான முதற்கட்ட ஆயத்தப் பணிகள்

»14



## புனரமைக்கப்பட்ட வீதி நேற்று மக்கள் பாவனைக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 13

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவில் வீதி புனரமைக்கப்பட்டு, மக்கள் பாவனைக்காக நேற்றுக்காலை திறந்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன்,

»14

## 68,000 பேருக்கு டெங்கு!



விரிவு பக்கம்:-14

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு

## தமிழரசுக்கட்சி ஆதரவளிக்காது!



### சுமந்திரன் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 13

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளை அடிப்படையாகக் கொண்டு,நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார

»15



## தேசிய கபடிப்போட்டி யாழ்.மகளிர் சம்பியன்

விரிவு பக்கம்:-14

## நீதிச் சேவைச் சங்கத் தலைவர் பதவியில் இருந்து விலகினார்!



கொழும்பு, ஜூலை 13

இலங்கை நீதிச் சேவைச் சங்கத்தின் தலைவர் பதவியிலிருந்து, கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை திடீரென ராஜினாமா செய்துள்ளார். சங்கத்தின் யாப்பு விதிகளை மீறி, சட்டவிரோதமான முறையில் பொதுக்கூட்டம் ஒன்றைக் கூட்டு

»14

## போக்குவரத்து நெரிசலில் இலங்கைக்கு மூன்றாமிடம்!

கொழும்பு, ஜூலை 13

உலகின் அதிக போக்குவரத்து நெரிசல் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. அத்துடன் ஆசியப் பிராந்திய அளவில் அதிக போக்குவரத்து நெரிசல் மிகுந்த நாடாக இலங்கை முதலிடத்தைப் பிடித்து மிக

»14

## இணுவில் கந்தனுக்கு இன்று தேர்!

யாழ்ப்பாணம், ஜூலை 13

வரலாற்றுச் சிறப்பு மிக்க இணுவில் கந்தசுவாமி ஆலயப் பராபவ வருடப்

»14






## போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 13

'எங்கள் நிலம் எங்களுக்கு வேண்டும்' என்ற கோரிக்கையை முன்வைத்து,பலாலி மக்கள் தங்களின் நான்காவது கட்ட அகிம்சைப் போராட்டத்தை நேற்று கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் பலாலிச் சந்தியில் முன்னெடுத்தனர். கடந்த 36 ஆண்டு கால யுத்தத்தினால் தங்களின் சொந்தக் குடியிருப்புகளையும், வாழ்வாதாரக் காணிகளையும் இழந்து நடுத்தெருவில் நிற்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்ட பலாலிப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களே, தற்போது

»14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

13.07.2026 திங்கட்கிழமை

**கொவிசெத** — திகதி 12.07.2026; சீட்டிழுப்பு இலக்கம் 4488; ஆங்கில எழுத்து P; வெற்றி இலக்கங்கள் 34 52 58 72; விசேட எழுத்து P

**ஹந்தஹண ராசி சுப பலன்** — திகதி 12.07.2026; சீட்டிழுப்பு இலக்கம் 1555; வெற்றி இலக்கினம் கன்னி; வெற்றி இலக்கங்கள் 01 39 48 52

**NLB ஜய** — திகதி 12.07.2026; சீட்டிழுப்பு இலக்கம் 0514; ஆங்கில எழுத்து O; வெற்றி இலக்கங்கள் 7 6 4 5

**மெகா பவர்** — திகதி 12.07.2026; சீட்டிழுப்பு இலக்கம் 2594; ஆங்கில எழுத்து S; சுப்பர் இலக்கம் 07; வெற்றி இலக்கங்கள் 22 24 35 67

**மஹஜன சம்பத** — திகதி 12.07.2026; சீட்டிழுப்பு இலக்கம் 6246; ஆங்கில எழுத்து J; வெற்றி இலக்கங்கள் 6 7 4 8 9 2

**தன நிதானய** — திகதி 12.07.2026; சீட்டிழுப்பு இலக்கம் 2276; ஆங்கில எழுத்து R; வெற்றி இலக்கங்கள் 36 48 76 80; விசேட எழுத்து R

**சுப தவசக்** — திகதி 12.07.2026; சீட்டிழுப்பு இலக்கம் 0362; வெற்றி இலக்கினம் கடகம்; வெற்றி இலக்கங்கள் 02 08 54

# அரசாங்கம் பொறுப்பேற்பதைவிட பொறுப்புக்கூறுவதே சிறந்தது!

## எதிர்க்கட்சி தெரிவிப்பு

**கொழும்பு,ஜூலை 13**

**நீதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டாலும்கூட, அதனால் ஏற்படும் அரசியல் தாக்கங்களை எதிர்காலத்தில் அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளர் எஸ்.எம்.மரிக்கார் எம்.பி. தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீர்கொழும்பு சிறைச்சாலைச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்பதை விட, அதற்குப் பொறுப்புக்கூறுவதே அரசாங்கத்துக்கு மேலானது.

இந்தச் சம்பவம் நடந்த முதல் நாளிலேயே மோதலில் ஈடுபட்ட கைதிகளை வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றியிருந்தால், இந்த விபரீதத்தையும் அனர்த்தத்தையும் தடுத்திருக்கலாம்.

இதனை ஒரு சாதாரண வன்முறை என்று கடந்து போக முடியாது, இது ஒரு திட்டமிட்ட படுகொலையாகும். எனவே, இந்த உயிர் இழப்புகளுக்கு அரசாங்கமே முழுமையாகப் பொறுப்புக்கூற வேண்டும்.

இதன் காரணமாகவே நீதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர முன்னின்று வருகிறோம்.

நாடாளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு இருக்கும் பெரும்பான்மையால் இப்பிரேரணை வெற்றி பெறாது என்பது எமக்கும் தெரியும்.

எனினும், இந்த விவாதத்தின் மூலம் அம்பலமாகும் உண்மைகளும், அதனால் ஏற்படும் அரசியல் தாக்கங்களின் பிரதிபலனும் எதிர்காலத்தில் இந்த அரசாங்கத்துக்கு பாதகமாகவே அமையும்- என்றார். (ச-இ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசாங்கமாக எதிர்கொள்வோம்!

## நீதியமைச்சர் தெரிவிப்பு

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் சம்பவத்துக்கு நான் முழுமையாகப் பொறுப்பேற்கிறேன். எனினும் பதவியிலிருந்து விலகப்போவதில்லை. எமக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கொண்டுவரத் திட்டமிட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசாங்கமாகச் சிறந்த முறையில் எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீர்கொழும்பு மோதல் குறித்துச் சர்வதேச தராதரங்களுக்கு அமைய வெளிப்படையான விசாரணைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சிறைக்கைதிகளின் மனித உரிமைகளைப் போன்றே, உயிரிழந்த மற்றும் காயமடைந்த சிறைச்சாலை அதிகாரிகளின் மனித உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். மனித உரிமைகளில் எவ்வித பாகுபாடும் காட்டமுடியாது. நாட்டில் 10,000 கைதிகளுக்கான வசதிகள் மட்டுமே உள்ள நிலையில், தற்போது 27,000 கைதிகள் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். கடந்த கால அரசாங்கங்களின் முறையற்ற நிர்வாகமே இந்த நெரிசலுக்குக் காரணமாகும். குற்றச் செயல்களை ஒடுக்குவதற்காகப் பெருமளவிலானோர் கைதுசெய்யப்படுவதால் நெரிசல் ஏற்பட்டுள்ளதே தவிர. அதற்காகக் குற்றவாளிகளைக் கைதுசெய்யாமல் இருக்க முடியாது. அனைத்து விடயங்களையும் எதிர்க்கட்சியினர் அரசியல் நோக்கத்துக்காகப் பயன்படுத்துவதைக் கைவிட வேண்டும் - என்றார். (ச-இ)

# கதிர்காம யாத்திரிகர் மேலுமொருவர் சாவு

**கொழும்பு,ஜூலை 13**

கதிர்காம பாதயாத்திரையில் பயணித்த யாத்திரிகர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை திடீரென உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் பாணமை பகுதியில் நடந்துள்ளது.

நற்பிட்டிமுனையைச் சேர்ந்த நடராஜா அருள்குமார் என்பவரே உயிரிழந்தவராவார்.

இதேவேளை பாதயாத்திரையில் ஈடுபட்ட வவுனியாவைச் சேர்ந்த யாத்திரிகர் ஒருவர் கடந்த 8 ஆம் திகதி பொத்துவில் குண்டுமடு பகுதியில் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற SIR JOHN TARPET விளையாட்டுப் போட்டியில், காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய மாணவிகள் அஞ்சலோட்ட நிகழ்வில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். அத்துடன் 100 மீற்றர் ஓட்ட நிகழ்வு, நீளம் பாய்தல் நிகழ்வுகளிலும் பங்குபற்றிச் தகுதிச் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர். (க)




**சுபிரி தன சம்பத** — திகதி 12.07.2026; தினம் ஞாயிற்றுக்கிழமை; வெற்றி வாரம் 0954; ஆங்கில எழுத்து D; வெற்றி இலக்கம் 3 2 8 5 4 2

**Super Ball** (DLB) — திகதி 12.07.2026; தினம் ஞாயிற்றுக்கிழமை; சீட்டிழுப்பு வாரம் 3220; ஆங்கில எழுத்து V; வெற்றி இலக்கம் 23 32 33 35

**சனிதா** (DLB) — திகதி 12.07.2026; தினம் ஞாயிற்றுக்கிழமை; ஆங்கில எழுத்து K; வெற்றி இலக்கம் 18 32 37 65; வெற்றி வாரம் 5381

**SASIRI** (DLB) — திகதி 12.07.2026; தினம் ஞாயிற்றுக்கிழமை; வெற்றி வாரம் 1050; வெற்றி இலக்கம் 19 21 42

**லக்ன ராசி** (DLB) — திகதி 12.07.2026; தினம் ஞாயிற்றுக்கிழமை; மேஷம்; வெற்றி இலக்கம் 16 21 24 37; சீட்டிழுப்பு வாரம் 4932

**KAPRUKA** (DLB) — திகதி 12.07.2026; தினம் ஞாயிற்றுக்கிழமை; ஆங்கில எழுத்து E; சுப்பர் இலக்கம் 16; வெற்றி இலக்கம் 05 30 41 72; வெற்றி வாரம் 2396

**அத கோடிபதி** (DLB) — திகதி 12.07.2026; தினம் ஞாயிற்றுக்கிழமை; ஆங்கில எழுத்து Q; வெற்றி இலக்கம் 38 63 67 73; வெற்றி வாரம் 3046

# முகவரியைக் கேட்பது போல் நடித்து முதியவரைத் தாக்கிப் பணம் பறிப்பு!

## நவாலியில் துணிகரம்

**யாழ்ப்பாணம், ஜூலை 13**

வியாபாரத்துக்குச் சென்ற முதியவர் ஒருவரை வழிமறித்து இடம் கேட்பது போன்று பாசாங்கு செய்து பேசிவிட்டு அவரைத் தாக்கி அவரிடமிருந்த ஒரு தொகைப் பணத்தை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பறித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் பகல் வேளையில் நடந்துள்ளது. குறித்த முதியவர் சங்கரத்தையிலிருந்து நவாலி நோக்கிச் செல்லும் வீதியூடாகத் தனது நாளாந்த வியாபாரத்துக்காகச் சென்று கொண்டிருந்தார். இதன்போது, மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் முதியவரை வழிமறித்து, இடம் கேட்பது போலப் பாசாங்கு செய்து பேசியுள்ளனர்.

முதியவர் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்த சமயத்தில், திடீரென அவர்கள் முதியவர்மீது தாக்குதலை மேற்கொண்டு அவர் வியாபாரத்துக்காக வைத்திருந்த ஒரு தொகைப் பணத்தையும் வலுக்கட்டாயமாக அடித்துப் பறித்துக்கொண்டு அங்கிருந்து மோட்டார் சைக்கிளில் தப்பியோடியுள்ளனர். சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முதியவரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் சி.சி.ரி.வி. காட்சிகளின் ஆதாரங்களின் உதவியுடன் சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்காக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2.5 மில்லியன் டொலர் மாயம் திட்டமிட்ட இணையக்குற்றம்

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு!



**கொழும்பு, ஜூலை 13**

**அவுஸ்திரேலியாவின் நிறுவனத்துக்கு வழங்கப்பட வேண்டிய கடன் தவணைக் கடனில், 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் காணாமல் போனமை, திட்டமிட்ட இணையக் குற்றம் என்று பொது நிதிக்கான குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்த அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தச் சம்பவம் ஒரு பெரும் நிதிமோசடி. இதற்குப் பொறுப்பானவர்கள் அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துவதற்குச் சட்ட அமுலாக்க அதிகாரிகளிடம் விரிவான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

குறித்த பணம் செலுத்தப்பட வேண்டிய சமயத்தில், முறையான பாதுகாப்பற்ற சூழலைப் பயன்படுத்தி, இணையக் குற்றவாளிகள் இந்த மோசடியைச் செய்துள்ளனர்.

இந்தச் பரிவர்த்தனையில் ஈடுபட்ட நிறுவனங்களுக்கிடையில் காணப்பட்ட நிறுவன ரீதியான குறைபாடுகள் மற்றும் நடைமுறையில் இருந்த மெத்தனப் போக்குகளே இந்த இணையக்கொள்ளைக்கு வழிவகுத்துள்ளன.

இந்தச் சம்பவம் நாட்டின் நிதி நிர்வாகத்தில் உள்ள பெரும் ஓட்டைகளை வெளிப்படுத்துகின்றது. இவ்வாறான மோசடிகள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுப்பதற்குப் பொறுப்புக்கூறல் மற்றும் கணினிப் பாதுகாப்பு நடைமுறைகளை உடனடியாகப் பலப்படுத்த வேண்டியது அவசியம்-என்றார். (க-இ)

சிறைக்கலவரத்தில்

## உயிரிழந்த அதிகாரிகளுக்கு இழப்பீடு வழங்க பரிசீலனை

கொழும்பு, ஜூலை 13

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட வன்முறை மோதலில் உயிரிழந்த சிறைச்சாலை அதிகாரிகளின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 5 இலட்சம் ரூபா ஆரம்பகட்ட இழப்பீடு மாத்திரமே. ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 2 மில்லியனுக்கும் அதிக தொகையை மொத்த இழப்பீடாக வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படுகின்றது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான ஏ.சி. கஜநாயக்க தெரிவிக்கையில், உயிரிழந்த அதிகாரிகளின் இறுதிச் சடங்குச் செலவுகள் அனைத்தையும் சிறைச்சாலைகள் திணைக்களமே முழுமையாக ஏற்றுக்கொண்டது. உயிரிழந்தவர்களுக்கு மட்டுமன்றி, இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஏனைய சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் உரிய இழப்பீடு வழங்குவது குறித்தும் திணைக்களம் அவதானம் செலுத்தி வருகிறது - என்றார். (ச-44)

## சிறைமோதலுக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, ஜூலை 13

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலின்போது, கைதிகள் அதிகாரிகளைத் தாக்குவதற்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் கூர்மையான ஆயுதங்கள், இரும்புக் கம்பிகள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொல்லுகள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. விசாரணைகளின் போது, கைதிகள் சிறைச்சாலை சமையலறைக்குள் புகுந்து அங்கிருந்த தேங்காய்களையும் எடுத்து வந்து அதிகாரிகளைத் தாக்கியதாகத் தெரியவந்துள்ளது. நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற இந்தத் துயரச் சம்பவத்தில் 8 சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் 21 கைதிகள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## 6 மாவட்டங்களுக்கு வெப்ப எச்சரிக்கை!

ஆறு மாவட்டங்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் வெப்ப எச்சரிக்கை விடுத்துள்ளது. பகல் வேளையில் சில பகுதிகளில் வெப்பச் சுட்டெண் 'எச்சரிக்கை' மட்டத்தை எட்டக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த எச்சரிக்கை முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது. மனித உடலால் உணரப்படும் வெப்பநிலையைப் பிரதிபலிக்கும் வெப்பச் சுட்டெண், இந்த மாவட்டங்களின் சில பகுதிகளில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய அளவுகளுக்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)



## 143 களஞ்சியசாலைகளில் இன்றுமுதல் நெல் கொள்வனவு

கொழும்பு, ஜூலை 13

இந்த ஆண்டின் பெரும்போக அறுவடைக்கான நெல் கொள்முதல் இன்று ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், நாடு முழுவதும் 143 இடங்களில் அமைந்துள்ள களஞ்சியசாலைகளில் இருந்து நெல் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது. பல பகுதிகளில் பெரும்போக நெல் அறுவடை ஏற்கனவே தொடங்கிவிட்டதால், அதிக அறுவடை உள்ள பகுதிகளை அடையாளப்படுத்தி நெல் களஞ்சியசாலைகள் திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## தெண்டின காசில...!

அடுத்தவையின்ர உழைப்பை உறிஞ்சி அதில உல்லாசம் காணுற பழக்கம் எங்களிட்ட பரம்பரை பரம்பரையா இருக்குது. அந்தப் பழக்கம் வீடுகளில மட்டுமில்ல, பெரிய ஒப்பீஸ்களிலையும் தொத்திக் கனகாலமாகிட்டுது. இப்ப கடைசியா நடந்த அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் வரைக்கும் இப்பிடி இரவல் சீலையில கொய்யகம் போடுற வேலை அமோகமா நடக்குது. ஒவ்வொரு வருசமும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிற பிரதேச செயலகத்தில வேலை செய்யிற ஆக்களுக்கு அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் எண்ட பேரில விளையாட்டுப்போட்டியள் நடக்கிறது. ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிராதெல்லோ. ஒரேயடியா ஒப்பீஸ்க்குள்ள குப்பை கொட்டி மனம் இறுகிப் போயிருக்கிற உத்தியோகத்தர்மாருக்கு இப்பிடியான போட்டியள் கொஞ்சம் புத்துணர்ச்சியா இருக்கும் எண்டது உண்மைதான். ஆனால் 'அரசாங்க அதிபர்' எண்ட பதவிக்குப் பதிலா 'மாவட்டச் செயலர்' எண்ட பதவி வந்தே கனகாலம் ஆகிட்டுது. ஆனால் இன்னும் அந்தப் பழைய பதவியின்ர பேரிலையே இந்த விளையாட்டுப் போட்டி நடந்துகொண்டிருக்குது. இல்லாத பதவியின்ர பேரில நடக்கிற இந்தப் போட்டியின்ர பேரை அப்டேட் செய்வம் எண்டு ஆரும் இன்னும் யோசிக்கேலை.

சரி, இப்ப சொல்ல வந்தது அந்த விசயமில்லை. இந்த அரச அதிபர் வெற்றிக்கிண்ணப் போட்டியளை நடத்த வேண்டியது கச்சேரியில இருக்கிற ஊழியர் நலன்புரிச் சங்கம் தான். ஆனால் அந்த ஊழியர் நலன்புரிச் சங்கம் என்ன செய்யுமெண்டால் பிரதேச செயலகங்களில் இருக்கிற நலன்புரிச் சங்கங்களின்ர தலையில இந்தப் பொறுப்பைச் சுமத்திப்போட்டு பேசாமல் இருந்திடும். இந்தமுறை கன இடங்களில ஒவ்வொரு போட்டி நடக்கேக்கையும் அந்தந்த இடங்களில இருக்கிற பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கங்கள் தான் தங்கட காசைப் போட்டு போட்டியளை நடத்தினவை.

கடைசிநாள் நிகழ்வு பெரிய எடுப்பில மருதங்கேணியில நடந்தது. அதால அண்டையான் செலவு முழுக்க அந்தப் பிரதேச செயலக நலன்புரிச் சங்கம் தான் பொறுப்பெடுக்க வேணும். மற்ற நாள்கள் மாதிரி கடைசி நாளை சிம்பிளா, சிக்கனமா கொஞ்சக் காசோட செய்துமுடிக்கேலாது. மேடை, லவுட் ஸ்பீக்கர், சாப்பாடு, கொடி, குடை, பரிசு, சேர்ட்டிபிக்கட், குளிர்பானம் எண்டு எக்கச்சக்கமான செலவு. அதால கட்டைக்காட்டில இருந்து குடாரப்பு வரைக்கும் மீன் வாடி வைச்சிருக்கிறவையிட்ட இருந்து காசு வாங்கித்தான் விழாவை நடத்தி முடிச்சிருக் கினம். ஆனால் வாடி வைச்சிருக்கிறவையிட்ட எவ்வளவு காசு வாங்கினவை? எண்டு ரிசீற்றும் குடுக்கேலை, எவ்வளவு செலவழிச்சம் எண்டு கணக் கும் குடுக்கேலையாம். ஊர்க்காசில எவ்வளவு சில பேரின்ர பொக்கற்றுக்க போச்சுதோ தெரியேலை. அரசாங்க ஒப்பீஸ் நிகழ்வுக்கு இப்பிடி உயிரைப் பணயம் வைச்சு தொழில்செய்யிற மீனவர்மாரிட்ட காசு வாங்கினதே பெரும் பிழை. அப்பிடி அவை யிட்ட தெண்டின காசுக்கு ரிசீற்றும் குடுக்காம, கணக்கும் காட்டாமல் இருக்கிறது பிழையிலும் பிழையெல்லோ!

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# இரா. சம்பந்தன் நினைவேந்தல்!

திருகோணமலை, ஜூலை 13

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திருகோணமலை மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளை ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில், கட்சித் தலைவர் சி.வி.கே. சிவஞானம், பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். விளக்கேற்றி, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இரா. சம்பந்தனின் அரசியல் பயணத்தையும் தமிழர் சமூகத்துக்கான பங்களிப்புகளையும் நினைவுகூரும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து, பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் நினைவுப் பேருரையாற்றி, இரா. சம்பந்தனின் தலைமைத்துவம் மற்றும் அரசியல் சேவைகளை நினைவுகூர்ந்தார். (ச-இ)

# அஸ்வெசும பயனாளிகளுக்கு ரூ.5 லட்சம் வரை சலுகைக் கடன்

## குறைந்த வட்டியில் புதிய வாழ்வாதாரத் திட்டம்

**கொழும்பு, ஜூலை 13**

**அரசாங்கத்தின் 'அஸ்வெசும' நலன்புரி நிவாரணங்களை மட்டுமே சார்ந்து வாழும் குடும்பங்கள், தங்களின் சொந்த வருமானத்தை உருவாக்கி பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும் என்ற நோக்கில், புதிய சிறப்புச் சலுகைக் கடன் திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.**

இந்தத் திட்டத்தின் கீழ், அடுத்த 3 ஆண்டுகளுக்குள் 2 இலட்சம் அஸ்வெசும பயனாளிக் குடும்பங்களை வாழ்வாதார ரீதியாக வலுவூட்டும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி வங்கிகள் ஊடாக பயனாளிகளுக்கு அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபா வரை இந்தக் கடன் வழங்கப்படவுள்ளது. இந்தக் கடனுக்காக வெறும் 6% என்ற மிகக் குறைந்த வட்டி மாத்திரமே அறவிடப்படும். இந்த 6% வட்டியில் 4% வட்டியை அரசாங்கம் திறைசேரி நிதி மூலம் சமுர்த்தி வங்கிகளுக்கு நேரடியாகச் செலுத்தவுள்ளது. இந்தத் திட்டத்துக்கென அரசாங்கம் ரூ. 500 மில்லியன் நிதி ஏற்கனவே ஒதுக்கியுள்ளது. கடனைப் பெற்றுக் கொண்ட முதல் 12 மாதங்களுக்கு கடன் முதற்தொகை தவணையை செலுத்த வேண்டிய அவசியமில்லை. இந்தக் காலப்பகுதியில் மாதாந்த வட்டியை மட்டும் செலுத்தினால் போதுமானது. சமுர்த்தி வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்துள்ள நெருங்கிய உறவினர்களின் பிணையை வைத்தே இந்தக் கடனைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

அஸ்வெசும பயனாளிகள் தங்களது பிரதேச செயலகப் பிரிவுக்குட்ட சமுர்த்தி வங்கிக் கிளையை அணுகி, இந்தத் திட்டம் தொடர்பான மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# கரவெட்டியில் மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையின் அனுசரணையில் யாழ்ப்பாணம் கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் கரவெட்டி கிழக்கு காட்டுப்புலம் சிவநேசன் ஞாபகர்த்த பொது நோக்குமண்டபத்தில்தொற்றா நோய்கள் தொடர்பான மருத்துவமுகாம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. குறித்த மருத்துவ முகாமில் 41 பேருக்கு கண் பார்வைப் பாதிப்புகளும், 3 பேருக்கு நீரிழிவு அதிகரிப்பும், ஒருவருக்கு உயர் இரத்த அழுத்தமும், 19 பேருக்கு பல் பிரச்சினையும் கண்டறியப்பட்டு மேலதிக மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டன. (ச-80)



# கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 13

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2026ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டுக்கான முழுநேரக் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், அறை பராமரிப்பு சேவையாளர், நீர்க்குழாய் பொருத்துநர், முச்சக்கரவண்டி பொறிவலர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடைவடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக்கலைவல்லுநர், விரைவுசேவை உணவு வழங்குநர், முதியோர் பராமரிப்பாளர், டீசல் பெற்றோல் வாகன இயந்திர பொறிவலர், கட்டட நிர்மாண உதவியாளர், கணினி வன்பொருள் திருத்துநர், கணினி படவரைநர், குளிரூட்டி மற்றும் வளிசீராக்கி திருத்துநர், மரவேலை தொழில்நுட்பவியலாளர் போன்ற கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில்தகைமை மட்டம் 4 சான்றிதழுக்கான பயிற்சிநெறிகளாகும்.

க.பொ.த. சாதாரணதரம், க.பொ.த. உயர்தரம் கற்று மேற்படிப்பு கற்க முடியாதவர்கள் மற்றும் வேலைவாய்ப்பின்றி இருப்பவர்கள் உடனடியாக தங்கள் பதிவுகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல 12 கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் மேற்கொள்ளமுடியும்.

மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு 0212227949, 0710318737, 0776139307 ஆகிய தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். செரிமானப்பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை. நண்பர்கள் வகையில் திடீர் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். பிற்பகலுக்குமேல் மற்றவர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். புதிய நண்பர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** இன்று பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபடவேண்டி இருக்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மறைமுக எதிர்ப்பு நீங்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்குமேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்களின் விருப்பங்களைப் பூர்த்திசெய்வீர்கள்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** புதிய முயற்சிளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத்துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




# சிறையும் நெருக்கடியும்...!

நாடு முழுவதும் உள்ள சிறைகளில் அண்ணளவாக 30 ஆயிரம் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர் என்று அறிக்கையிட்டிருக்கின்றது சிறைச்சாலைகள் திணைக்களம். இலங்கைச் சிறைகளின் ஒட்டுமொத்தக் கொள்ளளவு 12 ஆயிரம் கைதிகள்தான் எனும்போது, கிட்டத்தட்ட இரண்டரை மடங்கு கைதிகளால் நிரம்பி வழிகின்றன இலங்கைச் சிறைகள். சிறைகளில் இடநெருக்கடிகள் அதிகரிக்கும்போது அது கலவரங்களுக்கும், குழப்பங்களுக்கும் காரணமாக அமைவது வழமை. ஆபிரிக்கச் சிறைகளிலும், தென் அமெரிக்கச் சிறைகளிலும் இவ்வாறான சம்பவங்களை நாங்கள் காண்கின்றோம் -கேள்விப்படுகின்றோம். இதன் தொடர்ச்சியே நீர்கொழும்புச் சிறையில் அண்மையில் ஏற்பட்ட கசப்பான விடயங்கள்.

இலங்கைச் சிறைகளில் உள்ள கைதிகளில் அண்ணளவாக 70 வீதமானவர்கள் போதைப் பொருள்பாவனையுடன் நேரடித் தொடர்புடைய நபர்கள் என்று கூறப்படுகின்றது. போதைப் பொருளை நுகர்ந்த ஒருவருக்கு, அது கிடைக்காத போது மன உளைச்சல் ஏற்படுவது இயல்பானது. அத்தகைய மன உளைச்சலுடன் சிறை நெருக்கடிகளும் இணைந்தால் அதன் விளைவு கலவரங்களாக மாறுவதற்கே சாத்தியங்கள் அதிகம். நீர்கொழும்புச் சிறையில் ஏற்பட்ட சம்பவங்கள் தொடர்பில் தற்போது விரிவான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று அரசாங்கம் கூறுகின்றது. மீள நிகழாமை உறுதிப்படுத்தப்படும் என அமைச்சர்கள் தெரிவிக்கின்றனர். உண்மையில் மீள நிகழாமையை உறுதிப்படுத்த அரசாங்கம் விருப்பம் கொண்டிருக்கின்றது எனில், சிறை நெருக்கடிக்கு உடனடித் தீர்வு காண்பதற்கு அவர்கள் முன்வர வேண்டும்.

மேலை நாடுகள் சிறை நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு 'வீட்டுச்சிறை' என்ற திட்டத்தை நேர்த்தியாகப் பின்பற்றுகின்றன. கைதிகளின் உடலில் அதிநவீன சாதனங்களைப் பொருத்தி அவர்கள் வீடுகளை விட்டு வெளியில் செல்ல முடியாதவாறு கண்காணிக்கப்படுவது வீட்டுச்சிறை என அறியப்படுகின்றது. இலங்கையில் அத்தகைய வசதிகளும், வாய்ப்புகளும் இல்லை. எனவே, மாற்றுத் திட்டங்களை அதி விரைவாக நாம் தேடவேண்டும் -நடைமுறைப்படுத்த வேண்டும். அரசியற் கைதிகளின் விடுதலை, கைதிகளின் தண்டனைக் குறைப்பு, அதிகளவான பொதுமன்னிப்புகள் என்பனவே நாட்டின் சிறைக்கட்டமைப்பில் தற்போதுள்ள நெருக்கடியை உடனடியாகக் குறைக்க வல்லன.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு முறையான வழக்கு விசாரணைகள் இன்றி ஏராளமான தமிழ் அரசியற்கைதிகள் தற்போதும் சிறைகளில் உள்ளனர். அத்துடன், சிறு குற்றங்களில் ஈடுபட்டவர்கள், பிணைத்தொகையை செலுத்தக் கூடிய இயலுமை அற்றவர்கள் என்போரும் இலங்கைச் சிறைகளில் தாராளம். இத்தகையவர்களை விடுவித்து, நாட்டின் சிறைக்கட்டமைப்பில் உள்ள சுமையைக் குறைப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த விடயத்தை அரசாங்கம் போர்க்கால அடிப்படையில் அணுகவேண்டும். இந்தத் திட்டங்களை அமுலாக்கும் பட்சத்தில் சிறை நெருக்கடியை ஓரளவேனும் குறைக்க முடியும். அத்துடன் தொலைநோக்குச் சிந்தனைகளும் இந்த விடயத்தில் காலத்தேவையாகவே உள்ளன.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




## பொய்யாமொழி

நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்

**பொருள்:** நடுவுநிலைமை இல்லாமல் பிறர்க்குரிய நல்ல பொருளை ஒருவன் கவர விரும்பினால் அவனுடைய குடியும் கெட்டு குற்றமும் அப்பொழுதே வந்து சேரும்.




## விளையாட்டுத்திறனை ஊக்குவிக்க வடக்குக்கு ரூ. 100 மில்லியன் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜுலை 13

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் "வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்ற தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், வடக்கு மாகாண மாணவர்களின் விளையாட்டுத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் ஐந்து மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்ய மொத்தமாக 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட திட்டத்தின் கீழ் வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கும் தலா 20 மில்லியன் ரூபா வீதம் நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 5 மில்லியன் ரூபா செலவில், தலா நான்கு பாடசாலைகள் வீதம் மொத்தம் 20 பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்கள் நவீன வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. நகரம் மற்றும் கிராமம் என்ற பாகுபாடின்றி அனைத்துப் பகுதி மாணவர்களுக்கும் சமமான, தரமான விளையாட்டு வசதிகளை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## யானை தாக்கி பெண் உயிரிழப்பு

மாத்தளை, ஜுலை 13

காட்டு யானை தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் மாத்தளை லக்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிவுலவாடியப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த பெண், லக்கல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் கிவுலவாடிய பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)




## பிரதேசசபை உறுப்பினர் துப்பாக்கியுடன் கைது!

கொழும்பு, ஜுலை 13

அம்பலாங்கொடை பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் ரிப்பீட்டர் ரக துப்பாக்கியொன்றை சட்டவிரோதமான முறையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் காலி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த துப்பாக்கி அவருக்கு எவ்வாறு கிடைத்தது என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும், இது ஏதேனும் குற்றச் செயல்களுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா? என்பது குறித்தும் விசாரணை நடத்தி வருவதாக காலி மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## வீட்டின் மீது துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஜுலை 13

மத்துகமவின் நெபோடாப் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

ரி-56 ரக துப்பாக்கியைப் பயன்படுத்தி இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)



## பலத்த காற்று

கொழும்பு, ஜுலை 13

தென்மேற்குப் பருவக்காற்று தீவிரமடைந்துள்ளதன் காரணமாக, நாட்டின் பல பகுதிகளில் அவ்வப்போது 40 முதல் 50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. மத்திய, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணங்களும், மொனராகலை, புத்தளம், அம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களும் இதனால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. (ச-இ)

## நாளை

செவ்வாய்க்கிழமை-ஆனி 30

14.07.2026


சுபநேரம் : 10.30 – 12.00

ராகுகாலம் : 03.00 – 04.30


Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்துக

## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து



முல்லைத்தீவு, ஜூலை 13

**முல்லைத்தீவுக் கடற்பரப்பில் அதிகரித்து வரும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த, துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வலியுறுத்தியுள்ளார்.**

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சுக்குரிய அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் அண்மைய நாள்களாக வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், சுருக்கு வலை, டைனமெட் வெடிவைத்து மீன்பிடித்தல் உள்ளிட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இவற்றை உறுதிப்படுத்தும் வகையில் புகைப்படங்கள், காணொலிகள் உள்ளிட்ட ஆதாரங்களும் உள்ளன. சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் அதிகரித்திருப்பதால், சிறு தொழிலாளர்கள் கடற்றொழில் செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது. ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ள கடற்படையினரும் இவற்றைக் கண்டு கொள்வதில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் சுட்டிக்காட்டினார். இதற்குப் பதிலளித்த கடற்றொழில் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் ஆகியோர், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான துரித நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கடற்படையினருக்கும், துறைசார் திணைக்கள அதிகாரிகளுக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது-என்றனர். (க-246)



## விழிப்புணர்வுப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 13

ஜெசாக் நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில், யாழ். மாவட்டத்தின் பெண் அரசியல் செயற்பாட்டாளர்களுக்கான AI தொழில்நுட்ப அறிவூட்டல் மற்றும் வலுவூட்டல் விழிப்புணர்வுப் பயிற்சியானது ஜெசாக் நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் ஜெசாக் நிறுவன சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், நிர்வாக முகாமையாளர் மற்றும் பணியாளர்கள், 30க்கும் மேற்பட்ட பெண் அரசியல் செயற்பாட்டாளர்கள் பங்கேற்றனர். (க-27)





சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் விடுதிகளுக்கு பொருத்த ஆறு மின்விசிறிகள் மற்றும் நோயாளர் பயன்பாட்டுக்கான இரண்டு மின்குமிழ்கள் என்பவை அன்பளிப்பாக கையளிக்கப்பட்டுள்ளன. மீசாலையைச் சேர்ந்த இராசேந்திரன் பூபதி தம்பதியினர் தமது பேரப்பிள்ளைகள் வழங்கிய நிதியில் இவற்றை மருத்துவமனை நிர்வாகத்திடம் கையளித்தனர். (ச-9)



# சிறுவர் கழகங்களுக்கிடையில் யாழில் விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 13

வடக்கு மாகாண நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி,யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நேற்று இடம்பெற்றது.

மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி, திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 29 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 100 சிறுவர்கள் இந்த விளையாட்டுப் போட்டியில் பங்கேற்றனர். சிறுவர்களின் உடல் மற்றும் உளத் திறன்களை வெளிக்கொணரும் வகையில், 5 பிரிவுகளின் கீழ் ஓட்டம், நீளம் பாய்தல், உயரம் பாய்தல், தட்டெறிதல், குண்டெறிதல், அஞ்சல் ஓட்டம், கயிறு இழுத்தல் மற்றும் பாரம்பரிய விளையாட்டான தாச்சி உள்ளிட்ட போட்டிகள் இடம்பெற்றன.

நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜெயராணி பரமோதயன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். இறுதியாக, போட்டிகளில் வெற்றியீட்டிய சிறுவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. (க)

# நிறுத்தல், அளத்தல் உபகரணங்களுக்கு அடுத்த வாரம் முதல் முத்திரை பதித்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 13

வலிகாமம் வடக்குப் பிரதேச சபைக்குட்பட்ட வியாபார நிலையங்களில் வியாபார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் நிறுத்தல், அளத்தல் உபகரணங்களைப் பரிசோதனை செய்தல், சரிபார்த்தல் மற்றும் முத்திரை பதித்தல் நடவடிக்கைகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவினால் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

அதற்கமைவாக மல்லாகம் உப அலுவலகத்துக்குட்பட்ட வியாபார நிலையங்களுக்கான பரிசோதனை நடவடிக்கை எதிர்வரும் 14 , 15 ஆம் திகதிகளில் மல்லாகம் உப அலுவலகத்திலும், தெல்லிப்பழை உப அலுவலகப் பிரிவுக்குட்பட்ட வியாபார நிலையங்களுக்கான பரிசோதனை நடவடிக்கை எதிர்வரும் 16 ஆம் திகதி தெல்லிப்பழைப் பொது நூலகத்திலும், மயிலிட்டி உப அலுவலகப் பிரிவுக்குட்பட்ட வியாபார நிலையங்களுக்கான பரிசோதன்ன நடவடிக்கை எதிர்வரும் 21 ஆம் திகதி மயிலிட்டி உப அலுவலகத்திலும், காங்கேசன்துறை உப அலுவலகப் பிரிவுக்குட்பட்ட வியாபார நிலையங்களுக்கான பரிசோதனை நடவடிக்கை எதிர்வரும் 22 ஆம் திகதி காங்கேசன்துறை உப அலுவலகத்திலும் மேற்கொள்ளப்படும். (க-66,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஆரோக்கிய அன்னை வருடாந்தத் திருவிழா

மன்னார்,ஜூலை 13

நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாத் திருப்பலி கடந்த வெள்ளிக்கிழமை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. தாழ்வுபாடு பங்குத்தந்தை அருட்தந்தை றெஜினோல்ட் அடிகளார் தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து திருவிழாத் திருப்பலியைக் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர். திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து, திருச்சொரூபப் பவனியும், திருச்சொரூப ஆசியும் இடம் பெற்றன. ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவுக்கான கொடியேற்றத்தின்போது, நானாட்டான் பங்குக்குட்பட்ட 8 துணை ஆலயங்களின் கொடிகள் ஏற்றப்பட்ட நிலையில், நேற்றுமுன்தினம் அனைத்து ஆலயங்களினதும் கொடிகளும் இறக்கப்பட்டன. (க-56)



வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயக் கார்த்திகைத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-66)

# பருத்தித்துறை நகரத்தில் பொலிஸாருக்கு இடவசதி

## நகரசபைத் தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13


பருத்தித்துறை நகர்ப் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் பொலிஸாருக்கு இடவசதி ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தெரிவித்துள்ளார். பருத்தித்துறை நகரில் பொது அமைதியை நிலைநிறுத்துவது, சட்டவிரோதச் செயற்பாடுகளைத் தடுப்பது உள்ளிட்ட நோக்கங்களுக்காக நகர்ப் பகுதியில் தொடர் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளுவது தொடர்பில் பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக பருத்தித்துறை நகர்ப் பகுதியில் பொலிஸார் மற்றும்சிவில்பாதுகாப்புப்படையினர் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். இவ்வாறு கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் பொலிஸாருக்கு நவீன சந்தைக் கட்டடத்தொகுதியில் பருத்தித்துறை நகரபிதாவினால் பிரத்தியேகமான இடவசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.


குறித்த இடத்தினை பருத்தித்துறை தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கருணாரத்ன, நகரபிதாவுடன் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டு பொறுப்பேற்றிருந்தார். (ச-100)



பளை இத்தாவில் வேம்பொடுகேணி சீ. சீ.த.க.பாடசாலையின் மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வடக்கு கல்வி வலய சமூக விஞ்ஞான பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி சிவானி கேதீஸ்வரன் கலந்து கொண்டார். (ச-40-9)


மண்கும்பான் பிள்ளையார் ஆலயத்துக்கு புதிதாக மஞ்சம் அமைப்பதற்கான ஆரம்பக் கிரியைகள் கடந்த வாரம் இடம்பெற்றன. (க-25)





வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் கந்தசுவாமி ஆலயப் பராபவ வருட மஹோற்சவத்தின் கைலாசவாகனத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை அடியவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக இடம்பெற்றது. இதன்போது மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய கைலாசவாகனத்தில் இணுவில் கந்தன் வீதி உலா வந்தார். (ச-40-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடுத்த ஆண்டில்

# 22 குடிதண்ணீர்த் திட்டங்களுக்காக 2000 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு!

அநுராதபுரம்,ஜூலை 13

**2000 கோடி ரூபா செலவில் 22 குடிதண்ணீர் வழங்கல் திட்டங்களை, அடுத்த ஆண்டில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் பழைய திட்டங்களை விரிவாக்கி புதிதாக சுமார் 10 இலட்சம் குடும்பங்களுக்கு நீர் விநியோகங்களை வழங்குவதற்குத் தேவையான திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய அரசாங்கம் விவசாயிகளுக்கு சிறந்ததொரு வாழ்க்கை, சமூக மதிப்பு மற்றும் கௌரவத்தைப் பெற்றுக் கொடுக்கும்.

நீர்ப்பாசனத் திட்டங்களின் பணிகளை மீண்டும் ஆரம்பித்து பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குத் தேவையான நீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் உட்பட விவசாயிகளுக்காகக் குறிப்பிடத்தக்க அளவிலான பணிகளை அரசாங்கம் நிறைவேற்றி வருகின்றது. அநுராதபுரம் மாவட்டத்தில் பதவிய, கெபிதிகொல்லேவ, ஹொரவப்பொத்தான மற்றும் கஹடகஸ்திகிலிய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் நிலவும் நீண்டகால சிறுநீரக செயலிழப்பு நோய்க்கு ஒரு தீர்வாக, 67 ஆயிரம் குடும்பங்களுக்கு சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிதண்ணீரை வழங்கும் நோக்கத்துடன், இலங்கையிலுள்ள ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலையம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சு மற்றும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றின் மூலம் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. எனவே இந்தத் திட்டம் வெறும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மட்டுமல்லாது, மக்களின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்துவதாகும்- என்றார். (க-இ)

## ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் வெற்றிகரமாகப் பிரித்தெடுப்பு!

இலங்கை மருத்துவத்துறை சாதனை

கொழும்பு, ஜூலை 13

ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் ஐந்து வருடங்களுக்குப் பின்னர் பேராதெனியவில் வெற்றிகரமாகப் பிரித்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சத்திரசிகிச்சை இலங்கையின் மருத்துவ வரலாற்றில் நிகழ்த்தப்பட்ட சாதனையாகப் பாராட்டப்பட்டு வருகின்றது.

பேராதெனிய போதனா மருத்துவமனை, சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் மருத்துவமனை மற்றும் பேராதெனிய பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட மருத்துவ நிபுணர்கள் குழுவினர் இணைந்து, கடந்த ஜூன் மாதம் 10ஆம் திகதி இந்த சிக்கலான சத்திரசிகிச்சையை மேற்கொண்டனர். மாவனெல்ல, அரநாயக்க பிரதேசத்தில் கடந்த 2021ஆம் ஆண்டு ஒட்டிப் பிறந்த இரட்டையர்களான பெண் குழந்தைகளே இவ்வாறு வெற்றிகரமாகப் பிரித்தெடுக்கப்பட்டு, தற்போது இரண்டு தனித்தனிக் குழந்தைகளாக மாற்றப்பட்டுள்ளனர். இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட மருத்துவ நடைமுறைகளிலேயே மிகவும் சிக்கலான மற்றும் ஆபத்து நிறைந்த குழந்தை மருத்துவப் பிரிப்பு சத்திரசிகிச்சைகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது. (ச-இ)



## பிறப்பு வீழ்ச்சியைத் தடுப்பதற்கு தனிநபர் பிரேரணை சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜூலை 13

நாட்டில்குழந்தைபிறப்புவீதம்தொடர்ந்து குறைந்து வருவதால், குழந்தை பிறப்பு எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் குடும்பங்களுக்கு ஊக்கத்தொகை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தும் தனிநபர் பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா முன்வைத்துள்ளார். 2018ஆம் ஆண்டு முதல் இலங்கையின் வருடாந்திர குழந்தை பிறப்பு எண்ணிக்கை தொடர்ச்சியாக குறைந்து வருகின்றது. இந்த நிலை தொடருமானால், எதிர்காலத்தில் இளைஞர் சனத்தொகை குறைவடைந்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் உற்பத்தித் திறனுக்கும் பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடும். எனவே, குழந்தை பிறப்பை ஊக்குவிக்கும் வகையில் குடும்பங்களைக் கவரக்கூடிய நிதி ஊக்கத்திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தவேண்டும் என அவர் தனது தனிநபர் பிரேரணையில் வலியுறுத்தியுள்ளார். (ச-இ)



## போதைப்பொருளுடன் பெண்ணொருவர் கைது!

கொழும்பு,ஜூலை 13


வத்தளை பொலிஸ் பிரிவுகுட்பட்ட பகுதியில் பெருமளவு போதைப்பொருள்களுடன் பெண் ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், நடத்தப்பட்ட சோதனையில், சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மட்டக்குளிப் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபரிடமிருந்து 1 கிலோ 140 கிராம் ஐஸ் போதைப்பொருளும், 538 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

## ஜனாதிபதியின் செயலாளரை சந்தித்தார் கொரியத்தூதுவர்

கொழும்பு,ஜூலை 13



சேவைக்காலத்தை நிறைவு செய்துள்ள, இலங்கைக்கான கொரியத் தூதுவர் மியோன் லீ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை, ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தார். இதன்போது இலங்கைக்கும் கொரியாவுக்கும் இடையே நிலவும் நீண்டகால நட்புறவு மற்றும் புதிய வேலைத்திட்டங்களுக்காக வழங்கிய பங்களிப்புக்களை, கொரியத் தூதுவர் பாராட்டினார். அதேவேளை இலங்கையின் அபிவிருத்திக்காக கொரிய அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்புகளுக்கு ஜனாதிபதியின் செயலாளர் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார். (க-இ)

## கைதிகளுக்கான பொதுமன்னிப்பு புதிய நடைமுறைகள் பரிந்துரை!

கொழும்பு, ஜூலை 13

தண்டனை விதிக்கப்பட்ட சிறைக் கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவதற்கான ஒழுங்குபடுத்தப்பட்ட, நியாயமான மற்றும் வெளிப்படையான நடைமுறையை உருவாக்குவதற்கான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிய [illegible] மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் ஆயிஷா ஜினசேனவிடம் குறித்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சிறைச்சாலைகளில் காணப்படும் அதிக நெரிசலைக் குறைப்பதுடன், கைதிகளின் புனர்வாழ்வு நடைமுறைகளில் உள்ள குறைபாடுகளை நீக்கி, சர்வதேச தரங்களுக்கு ஏற்ப சிறைச்சாலை முறைமையை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் இது முக்கியமான ஒரு கட்டமாகக் கருதப்படுகிறது.

குழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்து, பொருத்தமான முறையில் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப் பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகார ஆட்சியை நோக்கி நகர்கின்றது அரசாங்கம்!



## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூலை 13**

**தற்போதைய அரசாங்கமும் கடந்த அரசாங்கத்தைப் போலவே பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட மக்களின் அடிப்படை உரிமைகளை அப்பட்டமாக மீறி வருகின்றது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிறைவேற்றுத்துறை சட்டவாக்கத் துறை மற்றும் நீதித்துறை என மூன்று முக்கியமான தூண்கள் காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, சுதந்திர ஊடகமும் மற்றுமொரு தூணாக விளங்குவதால், அது அரசியலமைப்பில் நேரடியாகக் குறிப்பிடப்படாவிட்டாலும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

ஆனால், தற்போதைய அரசாங்கம் ஜனநாயக உரிமைகளை ஒடுக்கி, பேச்சுச் சுதந்திரத்தை இல்லாதொழித்துள்ளது. 'நிகழ்நிலைக் காப்புச் சட்டம்' மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆகியவற்றை நீக்குவோம் என்று தேர்தல் காலத்தில் கூறினாலும், அவை இன்னமும் நடைமுறையில் உள்ளன.

இன்று விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்குக்கூட சுதந்திரம் இல்லை. தேர்தல் காலத்தில், தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் நெல்லுக்கு 150 ரூபா உத்தரவாத விலை தருவதாகக் கூறினர். ஆனால் இன்று அது 120 ரூபாவுக்கும் குறைவான மட்டத்திற்கு வந்துள்ளது.

ஒரு கிலோ நெல்லை உற்பத்தி செய்வதற்கு 137 ரூபா செலவாவதாக விவசாய அமைச்சரே ஒப்புக் கொண்டுள்ளார். அவ்வாறிருக்க, விவசாயிகளின் தோள்களில் ஏறி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம், இன்று விவசாயிக்கு ஒரு கிலோவுக்குக் குறைந்தது 17 ரூபா நட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த அரசாங்கம் கடந்த அரசாங்கத்தின் பாதையிலேயே பயணித்து, 2023ஆம் ஆண்டைப் போலவே இன்றும் நாடாளுமன்றக் குழுக்களில் பேசுவதற்கும் கருத்துகளை வெளியிடுவதற்கும் தடைவிதித்துள்ளது.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52% பங்களிப்பை வழங்கும் நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோரின் சொத்துகளை ஏலம் விடுவது தொடர்பான 'பராட்டே சட்டத்தை', தேர்தல் இலக்குகளுக்காக மட்டுமே இந்த அரசாங்கமும் கடந்த அரசாங்கமும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்திருந்தன.

இந்த அரசாங்கம் சர்வாதிகார ஆட்சியை நோக்கி நகர முயற்சிக்கின்றது. இவர்கள் சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை, சுதந்திர ஊடகம் மட்டுமன்றி சிவில் சமூகத்தையும் முடக்கி, ஒரு சர்வாதிகாரப் போக்கைக் கடைப்பிடிப்பது மிகவும் ஆபத்தான ஒரு நிலைமையாகும் - என்றார். (ச-44)

# பொருளாதாரத் தோல்விகளை மறைக்கவே கைது நாடகம்!

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடிகள் மற்றும் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியமை ஆகியவற்றிலிருந்து பொதுமக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்காகவே, இளைஞர்களின் கைதுகளையும் குற்றத்தடுப்பு என்ற நாடகத்தையும் அரசாங்கம் கையாண்டு வருகின்றது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலுக்கு முன்னர் வேலைவாய்ப்பு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட பட்டதாரிகள், தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் வேலை கேட்டு வீதிக்கு இறங்கியபோது, வேலைக்குத் தவிர்ந்த பொலிஸாரின் அடக்குமுறைகளையும் கைதுகளையுமே எதிர்கொண்டுள்ளனர்.

வரி அதிகரிப்பு, அதிக கடன் வட்டி மற்றும் உற்பத்திச் செலவு உயர்வு ஆகியவற்றால் சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்றுறையினர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்தின் தவறான கொள்கைகளால் தொழிற்சாலைகள் மூடப்பட்டு, வேலைவாய்ப்புகள் பறிபோயுள்ளன.

மின்சாரம், எரிபொருள் மற்றும் நீர்க் கட்டணங்கள் தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருகின்றன.

அண்மையில் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் குறித்து அரசாங்கம் நடந்து கொண்ட விதம் வேடிக்கையானது. நாட்டின் நீதியமைச்சர் பேஸ்புக் மூலமாகவே இந்தச் சம்பவத்தைப் பற்றித் தெரிந்துகொண்டார். சம்பவம் நடந்து பல மணித்தியாலங்கள் வரை அங்கு என்ன நடக்கிறது என்பது பற்றி அவர் அறிந்திருக்கவில்லை.

மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற இந்த அரசாங்கம் முற்றிலும் தவறிவிட்டது. மேலும் மேலும் வரிகளை விதித்து மக்களை வதைக்காமல் அரசாங்கம் உடனடி நிவாரணங்களை வழங்கவேண்டும் - என்றார். (ச-இ)

# நீதியரசர்கள் பதவிக்கால நீடிப்பு நீதித்துறைக்கான இலஞ்சமே!

## முன்னாள் எம்.பி. தொலவத்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

அரசியலமைப்புத் திருத்தம் ஊடாகத் தற்போது பதவியில் உள்ள நீதியரசர்கள் மற்றும் நீதிபதிகளின் பதவிக் காலத்தை நீடிப்பது, நிறைவேற்றுத்துறையால் நீதித்துறைக்கு வழங்கப்படும் ஒருவகை 'இலஞ்சம்' அல்லது பரிசாகவே கருதப்படும் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், இரண்டு ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையிலும் அதற்கான ஆரம்பகட்ட பேச்சுகளைக்கூட முன்னெடுக்கவில்லை. மாறாகத் தமக்குச் சாதகமாக அரசியலமைப்பைத் திருத்தி, பிரதம நீதியரசர் உள்ளிட்ட உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் பதவிக்காலத்தை நீடிக்க அரசாங்கம் முயல்கிறது. நீதிபதிகளின் பதவிக்காலத்தை அதிகரிப்பதாக இருந்தால், அது புதிய அரசியலமைப்பின் ஊடாகவே செய்யப்பட வேண்டும். அதைவிடுத்து, தற்போது சேவையில் உள்ளவர்களின் பதவிக்காலத்தை இவ்வாறு நீடிப்பது முறையற்றது. உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் நிலவும் நீதிபதி வெற்றிடங்களை முறையாக நிரப்பாமல், ஜனாதிபதியே நீதித்துறையில் தற்போதைய நெருக்கடி நிலைமையை ஏற்படுத்தியுள்ளார். எனவே, அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்றப்பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும் - என்றார். (ச-இ)

# அடுத்த மாதத்தில் வெளியிடப்படும் பல்கலை அனுமதி வெட்டுப்புள்ளிகள்

கொழும்பு, ஜூலை 13

அண்மையில் நடந்து முடிந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையிலான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது. இந்த ஆண்டு பல்கலைக் கழக நுழைவுக்காக மொத்தம் 92,043 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பதாரர்களில் இருந்து, மொத்தம் 42,937 மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெறவுள்ளனர். அத்துடன், பல்கலைக்கழக பாடத்திட்டத்தில் பல புதிய பட்டப்படிப்புகளை அறிமுகப்படுத்தவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் புதிய கல்வி நடவடிக்கைகள் எதிர் வரும் செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் வசந்த லியனகே தெரிவித்துள்ளார். (ச-இ)



# பாம்பு தீண்டியதில் ஆசிரியர் சாவு!

மட்டக்களப்பு, ஜூலை 13

மட்டக்களப்பு, கொக்கட்டிச் சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டாரியாவெளியில் ஆசிரியர் ஒருவர் பாம்பு தீண்டியதில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

54 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

தனது வீட்டில் இருந்து வயல் அறுவடை வேலைகளுக்காக சென்றபோது வயலில் இருந்த பாம்பு தீண்டியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கடன்வசதி இணைய இணைப்புகளில் பொதுமக்கள் சிக்கிக்கொள்ளாதீர்!

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை 13

**அவசர கடன் வழங்கப்படுவதாக வரும் செய்திகளை நம்பி ஏமாறவேண்டாம் என்றும் அத்தகைய செய்திகள் மூலம் பகிரப்படும் இணைப்புகளை பதிவிறக்கம் செய்ய வேண்டாம் என்றும் இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு பொதுமக்களிடம் கோரியுள்ளது.**

சமூக வலைத்தளங்களில் தற்போது அவசர கடன்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனப் பல செய்திகள் பகிரப்பட்டுவருகின்றன.

இந்தச் செய்திகளில், சில நிறுவனங்கள் 5,000 முதல் 150,000 ரூபா வரையிலும், வேறு சில நிறுவனங்கள் 5 இலட்சம் ரூபா வரையிலும் கடன் வழங்கத் தயார் எனத் தெரிவிக்கின்றன. இந்த மோசடி நிறுவனங்களின் உண்மையான நோக்கம் பொதுமக்களின் தனிப்பட்ட தகவல்களைத் திருடுவதாகும். கடன் விண்ணப்பிப்பவர்களுக்கு அனுப்பப்படும் இணைப்பை கிளிக் செய்யுமாறு அவர்கள் பணிக்கின்றனர். அதை கிளிக் செய்தவுடன், அவர்கள் மோசடிக்காரர்களின் பிடியில் சிக்கிக்கொள்கின்றனர். இதன் மூலம் கைபேசியிலுள்ள புகைப்படங்கள், ஆவணங்கள், நண்பர்களின் தகவல்கள் மற்றும் தொலைபேசி எண்கள் அனைத்தையும் அவர்களால் அணுகமுடியும். முதலில் சிறிய கடன் தொகையை வழங்கி, பின்னர் அதனைத் திருப்பிச் செலுத்த முடியாத அளவுக்குப் பெரிய கடனாக மாற்றி, வட்டி மற்றும் நிபந்தனைகளைத் தீவிரப்படுத்துவதன் மூலம் பொதுமக்களை இவர்கள் அச்சுறுத்துகின்றனர். நிபந்தனைகளை நிறைவேற்றாதவர்கள் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதுடன், தங்களின் நண்பர்கள் முன்னிலையில் கடன் பெற்றுச் சிக்கலில் சிக்கியவர்களாகக் காட்டப்படுகிறார்கள். இலகு வான கடன் பெறச் சென்று இறுதியில் கையில் இருக்கும் பணத்தை யும் இழக்க நேரிடும் என்றும் பொலிஸார் எச்சரித்துள்ளனர். (ச-இ)

# வங்கிக்கணக்குகள் மக்கள் அவதானம்

கொழும்பு,ஜூலை 13

பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட வங்கிக்கணக்குகளை எக்காரணம் கொண்டும் வெளியாட்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கக்கூடாது என இலங்கை மத்திய வங்கி எச்சரிக்கையை விடுத்துள்ளது. நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமைகளைப் பயன்படுத்தி, சில மோசடிக் கும்பல்கள் சாதாரண பொதுமக்களுக்குச் சிறிய அளவிலான மாதாந்திரப் பணத்தை ஆசைவார்த்தையாகக்கூறி, அவர்களின் வங்கிக்கணக்குகளை 'வாடகைக்குப்' பெறுகின்றனர். இவ்வாறு பெறப்படும் கணக்குகள் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகக் குழுக்களின் பணப்பரிமாற்றம், சட்டவிரோத சூதாட்டம் மற்றும் கள்ளப் பணத்தை வெள்ளையாக்குதல் போன்ற குற்றச்செயல்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. எனவே வங்கி விதிகளின்படி, ஒருவருடைய தனிப்பட்ட வங்கிக்கணக்கில் நிகழும் ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் அதன் கணக்கு உரிமையாளரே சட்டப்படி முழுப் பொறுப்பாவார். எனவே, அறிமுகமில்லாத நபர்களிடமிருந்தோ அல்லது சமூக வலைத்தள விளம்பரங்கள் மூலமாகவோ வரும் இவ்வாறான ஆபத்தான சலுகைகளை நிராகரிக்கவேண்டும். தங்களது வங்கி அட்டை, கணக்கு விபரங்கள் மற்றும் கடவுச்சொற்களை யாருடனும் பகிர்ந்து கொள்ளவேண்டாம் என்றும் பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ச-இ)

சாய் முதியோர் பராமரிப்பு சேவை

**வீட்டில் உள்ள முதியவர்களைப் பார்க்க வேண்டுமா?**

**உங்களுக்கான அன்பான பராமரிப்புக்கு, தகுந்த, பயிற்சி பெற்ற பணியாளர்களை நாங்கள் வழங்குகிறோம்.**

மேலும் விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்
077 500 5412
GPS ROAD KALVIYANKADU
(CS 32147 A)

# இனங்களிடையேயான ஒற்றுமையே நாட்டின் வளர்ச்சிக்கு அத்திபாரம்!

## கூறுகிறார் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு,ஜூலை 13

இலங்கையை அபிவிருத்திப் பாதையில் முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டுமானால், அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடனும் ஒத்துழைப்புடனும் செயற்படவேண்டும் என முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், எமது நாட்டை முன்னேற்ற வேண்டுமாயின், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் மிக அவசியமானது. நல்லிணக்கம் இல்லாத சூழலில் நாடு ஒருபோதும் முன்னேற்றத்தை அடையாது. எமக்கு இடையே நிலவும் அனைத்துப் பிரச்சினைகளையும் கலந்துரையாடல்கள் மூலம் தீர்த்துக்கொண்டு, ஒற்றுமையாகச் செயற்பட முன்வர வேண்டும் - என்றார். (ச-இ)

# கல்விச் செயற்பாடுகளில் பன்முகத்தன்மை அவசியம்!

## கல்வியமைச்சர் தெரிவிப்பு

நாட்டின் கல்விச் செயற்பாட்டில் பன்முகத்தன்மையை அங்கீகரிப்பது இன்றியமையாதது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அரச பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்காக ஜனாதிபதி நிதியத்தினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'சரசவி திரியோ அபிமன்' விசேட புலமைப்பரிசில் திட்டத்தின் ஆரம்ப விழா, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொழும்பு அலரி மாளிகையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்தவொரு பிள்ளையும் நாட்டின் கல்வி முறையிலிருந்து விடுபடவோ அல்லது புறக்கணிக்கப்படவோ கூடாது. விசேட தேவையுடைய அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்வியில் சமமான வாய்ப்பினைப் பெற்றுக்கொடுப்பதே எமது அரசாங்கத்தின் பிரதான கொள்கையாகும். பல்கலைக்கழக வளாகங்களுக்குள் மாற்றுத்திறனாளி மாணவர்கள் எவ்வித சிரமமுமின்றித் தங்களின் கல்விச் செயற்பாடுகளைத் தொடர்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு மற்றும் நடைமுறை வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டிய விசேட பொறுப்பு, அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் உள்ளிட்ட உயர் கல்வி அதிகாரிகளுக்கு உண்டு - என்றார். (ச-இ)

# குடிதண்ணீர்ப் பாவனை சிக்கனம் பேணுங்கள்



கொழும்பு,ஜூலை 13

எல்- நினோ வானிலை முன்னெச்சரிக்கை காரணமாக, விவசாயிகள் மற்றும் அனைத்து நீர் பாவனையாளர்களும் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என நீர்ப்பாசனத் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது. நாட்டின் 80 முக்கியமான நீர்த்தேக்கங்கள் தற்போது அவற்றின் மொத்தக் கொள்ளளவில் சுமார் 48 வீதமாக உள்ளது. இதனால் வரும் காலங்களில் கடுமையான நீர் நெருக்கடி ஏற்படக்கூடும் என அஞ்சப்படுகிறது. எனவே விவசாயிகள் மற்றும் நீர்ப்பாவனையாளர்கள் தண்ணீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும் என நீர்ப்பாசனத் திணைக்களம் அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது. (ச-இ)

# மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 01 . 1966



இறப்பு 12 . 07 . 2026

## Dr. சுமதி சிவசுதன்

**(ஓய்வுபெற்ற சித்த மருத்துவ அத்தியட்சகர் - மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை, அச்சுவேலி)**

மகிழடி வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாயை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட Dr.சுமதி சிவசுதன் நேற்று (12.07.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலம்சென்றவர்களான சண்முகநாதன் - செல்லம்மா (ஓய்வுநிலை ஆசிரியர்கள்) தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற Dr.சிவசுதன் (முன்னாள் வைத்திய அதியட்சகர் - சித்த ஆதார வைத்தியசாலை பம்பைமடு, வவுனியா) அவர்களின் அன்பு மனைவியும், மந்துவிலைச் சேர்ந்த காலம்சென்ற தியாகராசா மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், Dr. வேணுகா, தேனுகா (மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்), கோபிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவகி (கனடா), ராகினி (பிரான்ஸ்), ரஜனி (ஜேர்மனி), தயாழினி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலம்சென்ற லிங்கேஸ்வரன் மற்றும் சிறிதரன் (பிரான்ஸ்), மாரிகுமார் (ஜேர்மனி), ஸ்ரீரூபன் (இலங்கை), சிவமங்கை - சிவராசா, சிவாஜினி-குகன், சிவமூர்த்தி-விஜிதா, சிவகுகன் -கஜாசனா, சிவானந்தன்-ரவீனா, சிவமதி- நந்தகுமார், சிவசக்தி - தவேந்திரன், சிவச்செல்வன்-வசந்தமாலா, சிவதீபம் - ஜதுர்சன், சிவராஜா - மீரா ஆகியோரின் அன்பு மைத்துனியும், தர்சிகா, கிரிதரன், ரஜிக்கா, சந்தியா, திவ்வியா, சோபிகா, பிரியதர்சினி, சபீஸ் ஆகியோரின் அன்புச் சித்தியும், தர்சன், கம்சன், சத்ஜன், பத்மஸ்ரீ, கோகுலஸ்ரீ, மதுஜன் அகிம்சா, அஸ்வின், அட்சிதன், அபிசரண், அபிநேகா, கிரிஷிகா, அருஷன், சகானா, ஓவியன், பிருத்விகா, கேசிகா ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், திருவேள், திருவிழி, மீரா, ரேணுகா, சகிதா, சாருஜா, தாரா, சேந்தன், கார்த்திகன், சதுஷன், கனுஷன், கார்மீஷன், ஆகில்யன், ஆருத்ரன் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2026) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மகிழடி வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

**தகவல்: குடும்பத்தினர்**
077 2830 347
076 6824 347
076 0793 774

(CS 32143)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதியில் நெல் உலர்த்தியதால் விபத்துக்குள்ளான பாரவூர்தி

வவு., ஜூலை 13

திருகோணமலையில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த சீமெந்து ஏற்றிச் சென்ற சிறியரக பாரவூர்தி, வீதியில் நெல் உலர்த்தப் பட்டிருந்ததால், கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து வவுனியா மஹதிவுல்வெவ பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

விபத்தில் பாரவூர்தியில் ஏற்றிச் செல்லப்பட்டிருந்த சீமெந்து மூட்டைகள் கீழே சரிந்து சேதமடைந்துள்ளன. (க)





## மரண அறிவித்தல்



பிறப்பு 27 . 12 . 1958

இறப்பு 11 . 07 . 2026

### சறோஜாதேவி (ராசாத்தி) இரத்தினராசா

வெள்ளாம்போக்கட்டி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், கோவிலாக் கண்டி மத்தி கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட சறோஜாதேவி இரத்தினராசா (ராசாத்தி) அவர்கள் 11.07.2026 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் மருமகளும், இரத்தினராசா அவர்களின் அன்பு மனைவியும், செல்லையா, புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், சேதுப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், கிருஷ்ணவியின் அன்புத் தாயாரும், சத்தியமூர்த்தி, சாரதாதேவி, சத்தியபாமா, பிரபாகரன் ஆகியோரின் அத்தையும், சுதாகரன், சுதர்சினி, உமாகாந்தன் ஆகியோரின் சித்தியும், அப்சரா, அபிஷ்னவி, ஆதவன், அபர்னன், ஆதிரன், அனன்ஜா, அதிரன், அகரா, அகீரா, ஆதிரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2026) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எறியாள்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 607 3578

வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம்.

(cr.041) N

## மரண அறிவித்தல்



பிறப்பு 16 . 09 . 1937

இறப்பு 11 . 07 . 2026

### திருமதி மரியாம்பிள்ளை வரவணிக்கம் (சித்தா)

புதுக்குடியிருப்பு 8ம் வட்டாரத்தை சேர்ந்த மரியாம்பிள்ளை வரவணிக்கம் (சித்தா) கடந்த 11.07.2026 சனிக்கிழமை அன்று காலமானார்.


அன்னார் காலம்சென்றவர்களான மத்தியாஸ் - செபமாலை தம்பதியரின் அன்பு மகளும், காலம்சென்ற மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலம்சென்றவர்களான அன்னம்மா, பிலிப்பு, அலோஸ், அருட்சகோதரி மேரி மெற்றில்டா (செபமாலைதாசர் சபை), மரியகுமாரத்தி, புஸ்பஸ்மா மற்றும் சின்னப்பு (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலம்சென்றவர்களான பொனிபஸ் புவிராஜன், அல்போன்ஸ் லிகோரி மற்றும் ஆரோக்கியகுணதாஸ் (நோர்வே), யாழ் மறைமாவட்டத்தை சேர்ந்தவரும் தற்போதைய கூழாமுறிப்பு பங்குத் தந்தையுமான அருட்பணி ம.கான்ஸ்போவர் அடிகளார் ஆகியோரின் அன்புத் தாயாரும், றஞ்சினி (நோர்வே), ஜஸ்மின் ஆகியோரின் அன்பு மாமியாரும், போல் றஜீவன் (நோர்வே), ஜனனி (நோர்வே), விஜயகுமார் (நோர்வே), திவானி (நோர்வே), தசவதனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், லிறோஸ் (நோர்வே), றாஜன் (நோர்வே), யய்சன் (நோர்வே), ஜக்சன் (நோர்வே), ஜசிக்கா (நோர்வே), ஜக்சீஸ் (நோர்வே), லிகோரி, சந்தோஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் எதிர்வரும் 15.07.2026 புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு அவ் ஆலய சேமக்காலையில் அன்னாரின் உடல் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அறிமுகமானவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 32142)A

தகவல்:
அருட்பணி ம.கான்ஸ்போவர் (மகன்)
ஆரோக்கிய குணதாஸ் (மகன்)
077 6128 755

## மரண அறிவித்தல்



மலர்வு 20 . 10 . 1961

உதிர்வு 11 . 07 . 2026

### சிவசம்பு நமசிவாயம்

யாழ்ப்பாணம் உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வவுனியா குட்செட் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு நமசிவாயம் அவர்கள் சனிக்கிழமை அன்று (2026-07-11) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - மங்களாதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன் - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், லோகேஷ்வரி அவர்களின் அன்பு கணவரும், நிலஷ்சன், ஷர்மிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், லக்சிகாவின் பாசமிகு மாமனாரும், அனுகீஷ், அனுக்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், நகுலேஸ்வரன் அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2026) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
+94770405120

குட்செட் வீதி,
வவுனியா.

(cr 039) N

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 01 . 1955

மறைவு 12 . 07 . 2026

### அருந்தவநாயகி பாலச்சந்திரன் (பிறேமா)

யாழ்ப்பாணம் சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருந்தவநாயகி (பிறேமா) பாலச்சந்திரன் அவர்கள் 12.07.2026 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் - பவளம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா - துரையம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் அவர்களின் துணைவியாரும், காலஞ்சென்ற நாகபூசணியம்மாள் மற்றும் சோமசேகரம், சிவகுமார் ஆகியோரின் சகோதரியும், பார்த்தீபன், தீபிகா ஆகியோரின் தாயாரும், நிஷாந்தன், இனியாள் ஆகியோரின் மாமியாரும், மைதிலி, சயந்தா, சுதர்சன் ஆகியோரின் சித்தியும், ரஜீவ், பிரதீப், கார்த்திகன், மகரதிகன், இலக்கியா ஆகியோரின் அத்தையும், மிருத்விகன், சாய்மித்ரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2026) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் சுதுமலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 1.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மகன் - பா. பார்த்தீபன்
077 019 5140

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(cs 61865) N



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# போலி நாணயத்தாள்கள் வைத்திருந்தவருக்குச் சிறை

வவுனியா,ஜுலை 13

வவுனியாவில் 50,000 ரூபா பெறுமதியான போலி நாணயத் தாள்களை உடைமையில் வைத்திருந்த நபருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

வவுனியாவில் கடந்த 2011 ஆம் ஆண்டு மே மாத காலப்பகுதியில் 50 ஆயிரம் ரூபா போலி நாணயத் தாள்களினை உடைமையில் வைத்திருந்த நபருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் நடத்தப்பட்ட மீள் விசாரணையின்போது குற்றவாளிக்கு எதிரான வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்புக்காக திகதியிடப்பட்டு இருந்தது. இதன்போது சந்தேகநபருக்கு எதிரான முதலாம் குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு அப்பால் வழக்குத் தொடுனர் தரப்பினரால் நிரூபிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி அமலவ ளன் ஆனந்தராஜா அறிவித்து, இரண்டு வருட கால சிறைத்தண்டனை மற்றும் ஒரு இலட்சம் ரூபா அபராதம், அபராத தொகையை செலுத்தத் தவறின் ஒரு ஆண்டு கால சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார். (ச-இ)

**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு முன்பாக 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.
தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்

**தொடர்பு: 076 6580 661** (CR 036) A

## 31 ஆம் நாள் அந்தியேட்டி கிரியை அழைப்பு



கடந்த 13.06.2026 அன்று இறைவனடி சேர்ந்த

### சிங்கராஜா பாலராணி

காலஞ்சென்றவர்களான நல்லதம்பி இராசதுரை (இளைப்பாறிய அதிபர்) - மகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வியும், வள்ளிபுரம் சிங்கராசாவின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான பாலறஞ்சினி (றஞ்சி) பாலறஜனி, பாலச்சந்திரன் மற்றும் பாலறமணி, பாலறாகினி, பாலகிருஸ்ணன் ஆகியோரின் சகோதரியும், பவானிதேவியின் மைத்துனியும், கிருஸ்ணபவான், கிருஸ்ணகாணன், கிருஸ்ணவாணி ஆகியோரின் பாசமிகு அத்தையும், மேகலா, பிரியந்தி, யனுசன் ஆகியோரின் பாசமிகு அம்மா முறையும், ஷாருகன், சாதன்யா, டேசிகா ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அவர்களின் அந்தியேட்டிகிரியைகள் இன்று (13.07.2026) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டக்கொள்கின்றோம்.

உடுவில் தெற்கு,
மானிப்பாய்.

**தகவல்:**
**இ.பாலகிருஸ்ணன்**
**077 645 0257**
(cr 031) N-1

## அறிவித்தல்

கீழ் காணும் உத்தியோகத்தர்கள் நிறுவனத்தை விட்டு விலகியுள்ளனர் என்று **Agro Multi Cultivation Pvt Ltd** நிறுவனத்தின் உயர் முகாமைத்துவ பீடம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கிறது.எனவே இந்த ஊழியர்களின் எந்தவித நிதி கொடுக்கல் வாங்கல்களுக்கும் நிறுவனம் பொறுப்புகூறாது என்பதை அறியத்தருகிறோம் - நன்றி



Jeganathan Malarvizhi



Ramamoorthy Koneswaran



Saseenthiran Piramiladevi



Manokaran Kanistalla



Haseena Banu



Jeyarani



Ponnaiya Barathy



R.A.Diloshan Fernando



R. Janarthan

AMC
Agro Multi Cultivation
We cultivate for your future

+94117 409 509 | +94 77 226 8268
No.94/2, Laurie's Road, Colombo 04


info@agromulticultivation.com | agromulticultivation.com

## மரண அறிவித்தல்

### லயன்.கா.வே. முத்துக்குமாரசுவாமி

**ஓய்வு பெற்ற உதவி பொது முகாமையாளர் (A.G.M.) தலைமை அலுவலகம், இலங்கை வங்கி (BOC)**

**மண்ணில்**
14 . 10 . 1934



**விண்ணில்**
10 . 07 . 2026

கைதடி மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வேலுப்பிள்ளை முத்துக்குமாரசுவாமி அவர்கள் 10.07.2026 வெள்ளிக் கிழமை அன்று அதிகாலை இறைபதம் அடைந்து விட்டார். அன்னார் கைதடி மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு வேலுப்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனும் கைதடி மேற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி முருகேசு - நாகமுத்து தம்பதிகளின் அருமை மருமகனும் காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும், கௌரி (அமெரிக்கா), சுசந்தி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தகப்பனும் சிறீதரன் (அமெரிக்கா), ரவீந்திரராஜா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் றிமாலினி இந்திரா, பிரதூஷன் (அமெரிக்கா), நிர்ஜா, கீர்த்தனா, கபில்ராஜ் (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் நாகபூசணியம்மா, காலஞ்சென்றவர்களான நாகேந்திரன், கண்ணகாதேவி, கங்காதரன் மற்றும் நடேஸ்வரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை ஆறுமுகம், சின்னத்துறை, சந்திரசேகரம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பி.ப. 02.00 மணியளவில் (14.07.2026) செவ்வாய்கிழமை கைதடி மேற்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பி.ப. 04.30 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மூத்தாளவத்தை வீதி,**
**(APC முன் வீதி) கைதடி மேற்கு,**
**கைதடி.**

**தகவல்:**
**மகள்-0785247161**
**0766935426**
**மருமகன்-0769870346**
**[illegible]**

## நீங்காத நினைவலைகளில் 17 ஆண்டுகள்.....

**மலர்வு**
18 . 07 . 1930



**உதிர்வு**
22 . 06 . 2009

### அமரர் சுப்பிரமணியம் நாகராஜா
(Retired MSO Jaffna Post Office)

**திதி :- சதுர்த்தசி 13.07.2026 திங்கட்கிழமை**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து அனைவரது வாழ்வினையும் பிரகாசிக்கச்செய்த அமரர் சுப்பிரமணியம் நாகராஜா அவர்களது ஆத்ம சாந்திக்காக 13.07.2026 திங்கட்கிழமை (இன்று) கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் பர்வதவர்த்தினி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமிக்கு மோட்ச அபிசேக ஆராதனைகள் இடம்பெற்று சுன்னாகம் வாழ்வக விழிப்புல வலுவிழந்தோர் இல்லம், வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக சிறுவர், முதியோர் இல்லம், புதுக்குடியிருப்பு, இனிய வாழ்வு இல்லம் ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்கள், முதியோர்களுக்கு விசேட மதிய உணவும் வழங்கப்படும்.

**அப்பா உங்கள்**
**ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்**

**தகவல்:- குடும்பத்தினர் சார்பாக**
**மகன் – நாகராஜா விஜயகுமார் (சங்கர்) - சுவிஸ்**
(cs.61857) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த வடமராட்சியில் விசேட கருத்தரங்கு

போதை மற்றும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட கருத்தரங்கு, புலோலி கிழக்குக் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பொலிஸ்பாதுகாப்புக்குழுத்தலைவர்கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில், பருத்தித்துறை பொலிஸ் நிலைய குற்றப்பிரிவுப் பொறுப்பதிகாரி எம்.ஏ.விஜயரத்தின, பொலிஸ் உத்தியோகத்தர் லங்கா ஆகியோர் கலந்துகொண்டு போதை விழிப்புணர்வு, மற்றும் குற்றச்செயல்களைத் தடுப்பது தொடர்பான கருத்துரைகளை வழங்கினர். ஒரு கிராமத்தில் சட்டம், ஒழுங்கு மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காகப் பொலிஸாரும், மக்களும் இணைந்து செயலாற்றவேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினர். கருத்தரங்கில் 6ஆம் வட்டார பிரதேசசபை உறுப்பினர் ரமணன், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கிராம மக்கள் கலந்துகொண்டனர். (க-80)

உயரதிகாரிகள் உள்ளடங்கலாக

# 500 பேரின் சொத்துகளை துருவுகின்றது அரசாங்கம்

**கொழும்பு,ஜூலை 13**

**முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர் அரச அதிகாரிகள் உள்ளடங்கலாக 500க்கும் மேற்பட்ட நபர்களின் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக, இலஞ்ச அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.**

ஆணைக்குழுவுக்குப் பொதுமக்கள் மற்றும் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற நம்பகமான முறைப்பாடுகளுக்கு அமைவாகவே இந்த விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இதில் முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சுமார் 60 அரசியல்வாதிகளும் அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட கிட்டத்தட்ட 100 உயர் அரச அதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர். சம்பந்தப்பட்ட நபர்களால் ஏற்கனவே ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றிய பிரகடனங்களின் உண்மைத்தன்மை குறித்து இந்த விசாரணைகளின்போது விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. இதே வேளை 2023ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச்சட்டத்தின் 80(1) பிரிவின்படி, குறித்த காலக்கெடுவுக்குள் தங்களின் சொத்து மற்றும்பொறுப்புகள்பற்றியபிரகடனங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். நீதிமன்றத்தின் ஊடாக அவர்களுக்குக் கடுமையான அபராதம் விதிக்கப்படலாம் அல்லது ஓராண்டுக்கு மேற்படாத சிறைத்தண்டனை வழங்கப்படலாம் என இலஞ்ச ஊழல் ஆணைக்குழு எச்சரித்துள்ளது. (ச-இ)

**வீடு வாடகைக்குத் உண்டு**

யாழ் நகரை அண்மித்த பிரபல்யமான பாடசாலைக்கு அண்மையில் மூன்று அறைகளை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 074 291 9908**

(CS 32146) A

## மரண அறிவித்தல்



பிறப்பு 22 - 11 - 1950

இறப்பு 11 - 07 - 2026

**திருமதி சண்முகராசா செல்வராணி**

இல.564, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி சண்முகராசா செல்வராணி அவர்கள் கடந்த 11.07.2026 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - யோகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகராசா அவர்களின் அன்பு மனைவியும், டயஸ்ரீ (சிறி), ரகுலேஸ்வரி (வசந்தா), சாந்திமதி (சுகந்தி), சயந்தன், சந்திரப்பிரியா (சர்மி), சியாமலா (பவின்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பரதராஜசிங்கம் மற்றும் திருநாவுக்கரசு, கனகலிங்கம், கணேசலிங்கம், அமுதலிங்கம், இந்திராணி, நடராசலிங்கம், சாந்தலிங்கம், கமலலோசனா, சாந்தலோசணா, பரமலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும், ஜெயராசு, கிருபாகரன், கணேஸ்வரன், ராதிகா, லோகிதமோகன், சதீஸ் ஆகியோரின் அன்பு மாமியும், கஜதீபன், கார்த்திக், மியூரியா, யுகப்பிரியா, ஜனனி, ஜனன், கிருஷாலினி, பவிஷாலின், கரிசா, ஆருதி, அனுஸ்கா, அக்ஷயா, கவினயா, சாறுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டக்ஷாயினி, சதுன், நச்சத்திரா, சானுயா, கிருத்திக் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2026) செவ்வாய்க் கிழமை பி.ப. 1.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.564, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 32145) A

## மரண அறிவித்தல்



பிறப்பு 24 . 04 . 1945

இறப்பு 12 . 07 . 2026

**பழனியாண்டி சுபத்திரை**

கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும் கட்டுவன், கோண்டாவில் மேற்கு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பழனியாண்டி சுபத்திரை நேற்று (12.07.2026) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுதாகரன், சுதர்சினி, சுரேஸ்குமார், றோகினி, சுரேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும், தமயந்தி, இளங்குமரன், றெஜிதா, உருத்திரகுமார், நிராஷினி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான துரைராசா, சோதிமணி, பஞ்சாட்சரம், இரத்தினசிங்கம், இராசலிங்கம் மற்றும் அன்னலிங்கம், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, செல்வநாயகம் மற்றும் கனகம்மா, மகாலட்சுமி, கனகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், பிரவீன், பிரவீனா, பிரசன், யாதவன், யனாதன், யனுசன், சமிக்கா, அசானி, இலக்கியன், மதுசனன், அஸ்விதா, சாருஜன், அக்சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.07.2026 புதன்கிழமை அன்று முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலட்டி லேன், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**

**தகவல்: குடும்பத்தினர். 0774342920**

(CS 32149) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தமிழ்க்...

தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதாரக் கட்டத்தில், சிறுபான்மைத் தமிழ் பேசும் மக்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், இலங்கைத் தமிழரசுக்கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய 6 கட்சிகளையும் உள்ளடக்கி இந்தக்கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் இவ்வாறு ஒரே கூட்டணியில் கைகோர்த்திருப்பது, இலங்கை அரசியல் அரங்கில் பெரும் எதிர்பார்ப்பையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

கொள்கையளவில் மட்டுமே இந்த ஆறு கட்சிகளும் இணைந்து செயற்படுவார்களா அல்லது தேர்தல் அரசியலிலும் இந்தக் கூட்டு தொடருமா? என்பன குறித்த விடயங்களை இன்றைய ஊடகமாநாட்டில் குறித்த ஆறு கட்சிகளும் அறிவிக்கலாமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-இ)

## காலநிலை...

என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார். காலநிலை மாற்றம் பற்றிய நாடாளுமன்ற ஒன்றியத்தின் விசேட கூட்டம், அதன் இணைத் தலைவர்களான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் அபேவிக்ரம ஆகியோரின் தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இக்கூட்டத்தில் விஞ்ஞானிகள், காலநிலை அறிஞர்கள் மற்றும் சுயாதீன ஆலோசனைக் குழுக்கள் பங்கேற்றன. இது குறித்து மேலும் பேசிய சஜித் பிரேமதாஸ, "ஒவ்வொரு நாடாளுமன்றக் கூட்டத்தொடரிலும் இந்த ஒன்றியம் ஒரு நாள் கட்டாயம் கூட வேண்டும். இது ஒரு தனிநபரின் காரியத்துக்காக அல்ல. கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பாற்பட்டு, விஞ்ஞான ரீதியான தரவுகளின் அடிப்படையில் அசம்பாவிதங்கள் நடப்பதற்கு முன்னரே நாட்டைத் தயார்படுத்தும் தொலைநோக்குத் திட்டத்துடன் நாங்கள் இயங்கி வருகிறோம்" -என்றார். 'எல் நினோ' மற்றும் 'லா நினா' காலநிலை மாற்றங்கள் விவசாயம், மீன்பிடி மற்றும் வர்த்தகத் துறைகளில் ஏற்படுத்தப்போகும் சவால்கள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-இ)

## போக்குவரத்து...

மோசமான ஒரு சாதனையைப் பதிவு செய்துள்ளது.

பயணத்துக்காக வீணடிக்கப்படும் நேரம், அதற்காக விரயமாகும் எரிபொருள், நெரிசலால் வாகன ஓட்டிகளுக்கு ஏற்படும் மன உளைச்சல், காபனீர் வெளியேற்றம் மற்றும் போக்குவரத்து நிர்வாகத்தின் திறமையின்மை போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டே இந்தத் தரவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தப்பட்டியலில் உலகளவில் நைஜீரியா முதலிடத்திலும், கோஸ்டாரிகா இரண்டாவது இடத்திலும் உள்ளன. அதேநேரம், உலகின் மிகக் குறைந்த போக்குவரத்து நெரிசல் கொண்ட நாடாக எஸ்தோனியா பதிவாகியுள்ளதுடன், ஆஸ்திரியா மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகளும் அமைதியான போக்குவரத்து கொண்ட நாடுகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. (அ-இ)

## போராட்டம்....

இராணுவத்தின் வசமுள்ள தங்களது பூர்வீக நிலங்களை உடனடியாக விடுவிக்கக் கோரி இந்த அகிம்சைப் போராட்டத்தைக் கையில் எடுத்துள்ளனர். தங்களின் நெஞ்சில் தேங்கிக் கிடக்கும் நீண்ட காலக் குமுறல்களை வெளிப்படுத்திய போராட்டக்காரர்கள், "எங்களது சொந்தக் காணிகளைப் பறித்து வைத்துள்ள இராணுவத்தினர், அங்கு பெரிய அளவில் விவசாய நடவடிக்கைகளையும், வர்த்தக நிலையங்களையும் அமைத்துத் தங்களின் சொந்தத் தேவைகளுக்காக லாபம் சம்பாதித்து வருகின்றனர். ஆனால், அந்த நிலங்களின் உண்மையான சொந்தக்காரர்களாகிய நாங்களோ, முப்பத்தாறு வருடங்களாக வீடுகளும் நிலங்களும் இன்றி அகதிகளாக அகதி முகாம்களிலும், வாடகை வீடுகளிலும் சொல்லொணாத் துயரங்களை அநுபவித்து வருகிறோம்" என வேதனையுடன் குறிப்பிட்டனர்.

மக்கள் தங்களின் போராட்டத்தை நீண்ட நாட்களுக்குத் தொடரும் நோக்கில் அந்த இடத்தில் தற்காலிகமாகக் கொட்டகை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். எனினும், அங்கு குவிக்கப்பட்டிருந்த பொலிஸார் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் அந்தக்கொட்டகைகளை அமைக்க விடாது தடுத்து நிறுத்தினர். பொலிஸாரின் இந்தத்தடைகளையும் மீறி, கொளுத்தும் வெயிலையும் பொருட் படுத்தாமல், தங்களின் நில உரிமைக் காகப் பலாலிச் சந்தியில் மக்கள் கண்ணீருடன் தொடர்ந்து தங்களது போராட்டத்தை முன்னெடுத்தனர். இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றமான சூழல் நிலவியது. (அ-26)

## நீதிச்...

வதற்கு எடுக்கப்பட்ட தன்னிச்சையான முடிவுக்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தே அவர் இந்த அதிரடி முடிவை எடுத்துள்ளதாக நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை நீதிச் சேவைச் சங்கத்தின் உத்தியோகபூர்வ யாப்பு விதிகளின்படி, பொதுக்கூட்டம் ஒன்றைக் கூட்டுவதற்குக் குறைந்தபட்ச உறுப்பினர்களின் பங்களிப்பு அவசியமாகும். எனினும், தேவையான எண்ணிக்கையிலான உறுப்பினர்களின் ஆதரவு இல்லாத ஒரு சூழலிலும், அவசரமாகப் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்துவதற்குச் சங்கத்தின் ஏனைய ஒரு தரப்பினர் தீவிரமாக முற்பட்டுள்ளனர்.

சங்கத்தின் தலைவர் என்ற ரீதியில், இந்த விதிமீறல் முடிவுக்கு நீதவான் தனது கடுமையான கண்டனத்தை வெளியிட்டிருந்தார். போதிய நிறைவெண் இல்லாத நிலையில் இக்கூட்டத்தைக் கூட்டுவது முற்றிலும் சட்டவிரோதமானது மற்றும் சங்கத்தின் கண்ணியத்தைக் குலைக்கும் செயல் என அவர் சுட்டிக்காட்டியிருந்தார். எனினும், ஏனைய தரப்பினர் தங்களது முடிவில் பிடிவாதமாக இருந்ததால், தனது கொள்கை மற்றும் சட்ட நெறிமுறைகளின்படி தனது பதவியில் தொடர விரும்பாமல் அவர் தனது பதவியை நேற்று காலை அதிரடியாகத் துறந்துள்ளார். இச்சம்பவம் தற்சமயம் இலங்கை நீதித்துறை அதிகாரிகள் மத்தியில் பெரும் விவாதப் பொருளாக மாறியுள்ளது. (அ-இ)

## 68,000...

இலங்கையில் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை 68,000ஐக் கடந்துள்ளதாகத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது. உத்தியோகபூர்வ அறிக்கையின்படி, இதுவரை 68,071 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், சிகிச்சை பலனின்றி 47 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஜூன் மாதத்தில் மட்டும் வரலாற்றில் இல்லாதவாறு ஒரே மாதத்தில் 21,538 நோயாளர்கள் கண்டறியப்பட்ட நிலையில், இந்த ஜூலை மாதத்தின் முதல் 12 நாட்களில் மட்டுமே 12,692 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மாகாண ரீதியில், மேல் மாகாணம் 35,823 நோயாளர்களுடன் மிக மோசமான பாதிப்பைச் சந்தித்துள்ளது. இதற்கு அடுத்தபடியாகத் தெற்கு மாகாணத்தில் 10,657 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 5,756 பேரும், கண்டி மாவட்டத்தில் 5,560 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளதால், பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு சுகாதாரத் துறை கேட்டுக் கொண்டுள்ளது (அ-இ)

## இணுவில்...

பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 08.30 மணியளவில் வசந்தமண்டபப் பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து சித்திரத் தேரில் இணுவில் கந்தப் பெருமான் பவனி வரும் திருக்காட்சி இடம்பெறும். இதேவேளை, நாளை செவ்வாய்க்கிழமை 04 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும், நாளை இரவு கொடியிறக்கத் திருவிழாவும் இடம்பெறும். (அ-66)

## 2027க்கான...

தற்போது போர்க்கால அடிப்படையில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு அமைச்சுக்கும் அடுத்த ஆண்டில் தேவைப்படும் ஒதுக்கப்பட்ட செலவின விவரங்கள் மற்றும் நிதி ஒதுக்கீட்டு கோரிக்கைகள் தற்போது திறைசேரியினால் திரட்டப்பட்டு வருகின்றன. இந்த விவரங்கள் முழுமையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் அமைச்சரவையின் இறுதி ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதி இச்சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் பகிரங்கமாக வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில், நவம்பர் மாதம் 12ஆம் திகதி நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும். அன்றைய தினமே நாட்டின் புதிய வரவு செலவுத் திட்ட உரை நாடாளுமன்றத்தில் நிகழ்த்தப்படவுள்ளது. நாட்டின் நிதியமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாதீட்டை நாடாளுமன்றத்தில் முன்வைத்து, விசேட கொள்கை உரையை நிகழ்த்தவுள்ளார். நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வரிச் சீர்திருத்தங்கள் மற்றும் சலுகைகள் குறித்த முக்கியமான அறிவிப்புகள் இதில் இடம்பெறலாம் என்பதால் ஒட்டுமொத்த நாடும் அன்றைய தினம் ஜனாதிபதியின் உரையை உற்றுநோக்கவுள்ளது. நவம்பர் 13 முதல் 20 வரை வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் தொடர்ச்சியாக நடைபெறும்.

நவம்பர் 21 முதல் டிசம்பர் 14 வரை வரவு செலவுத் திட்டத்தின் மிக முக்கியமான கட்டமான குழுநிலை திருத்தங்கள் மற்றும் அமைச்சுகள் வாரியான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதங்கள் ஆரம்பமாகும். டிசம்பர் 14ஆம் திகதி வரை நீண்ட நாட்களுக்கு இந்தத் துறைசார் நிதி ஒதுக்கீட்டு விவாதங்கள் நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-இ)

## புனரமைக்கப்பட்ட...

ஜெ.ரஜீவன் ஆகியோரால் குறித்த வீதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.


கிராமிய பாதைகளுக்கான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குறித்த 1.5 கிலோமீற்றர் நீளமான பாதை 74.5 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு நேற்று மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான க. இளங்குமரன், ஜெ.ரஜீவன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-26)

## தேசிய...

36ஆவது தேசிய மட்டப் பெண்களுக்கான கபடிப் போட்டியில், யாழ்ப்பாண மாவட்ட அணி மகுடம் சூடி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. நேற்று ஞாயிற்றுக்கிழமை மாத்தறை பொது விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டி, மைதானத்தில் திரண்டிருந்த ரசிகர்களை இருக்கையின் நுனிக்கே வரவழைக்கும் அளவிற்குப் பரபரப்பின் உச்சமாக அமைந்தது. ரசிகர்களின் பலத்த ஆரவாரத்துக்கு மத்தியில் இறுதிப் போரில், யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து வடக்கின் பலம் வாய்ந்த கிளிநொச்சி மாவட்ட அணி களமிறங்கியது. ஆட்டம் ஆரம்பமானது முதலே இரு அணி வீராங்கனைகளும் தங்களின் அசாத்திய ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். "நாங்கள் எவருக்கும் சளைத்தவர்கள் அல்லர்" என்பதை நிரூபிக்கும் வகையில், கபடித் திடலில் புயலெனப் பாய்ந்து இரு அணியினரும் புள்ளிகளை வாரிக்குவித்தனர். ஆட்ட நேர முடிவில், 28:25 என்ற மிகக் குறுகிய புள்ளிகள் வித்தியாசத்தில் கிளிநொச்சி அணியை வீழ்த்தி, யாழ்ப்பாண மாவட்ட அணி கம்பீரமாக வெற்றிக் கனியைப் பறித்ததுடன், 36ஆவது தேசிய மட்டக் கபடிப் போட்டியின் சம்பியன் கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொண்டது. இறுதி வரை போராடித் தோற்ற கிளிநொச்சி வீராங்கனைகளின் ஆட்டமும் ரசிகர்களின் பலத்த பாராட்டைப் பெற்றது. (அ-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டும் மூடப்பட்டது ஹோர்மூஸ் நீரிணை

தெஹ்ரான்,ஜூலை 13

**உலக அளவில் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு போக்குவரத்திற்கு மிக முக்கியமான பாதையாக விளங்கும் 'ஹோர்மூஸ் நீரிணையை' முழுமையாக மூடுவதாக ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை அறிவித்துள்ளது.**

ஹோர்மூஸ் நீரிணையில் அனுமதிக்கப்படாத மாற்றுப் பாதையில் சென்ற சைப்ரஸ் நாட்டின் வணிகச் சரக்குக் கப்பல் ஒன்றை நோக்கி ஈரான் கடற்படை எச்சரிக்கைத் தாக்குதல் நடத்தியது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் தலையீடுகள் மற்றும் ஆக்கிரமிப்புகள் முழுமையாக முடியும் வரை ஹோர்மூஸ் நீரிணை மூடப்பட்டிருக்கும். இதன் வழியே எந்தவொரு வணிகக் கப்பல்களும் செல்ல அனுமதி இல்லை என ஈரான் அறிவித்துள்ளது.

ஈரான் வணிகக் கப்பலைத் தாக்கியதற்கும், கடல் எல்லையை மூடியதற்கும் பதிலடியாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உத்தரவின் பேரில் அமெரிக்க இராணுவம் ஈரான் மீது வான்வழித் தாக்குதல்களைத் தொடங்கியுள்ளது.

இதனால் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே நிலவிவந்த தற்காலிக போர்நிறுத்த ஒப்பந்தம் கேள்விக்குறியாகியுள்ளது. (ச-இ)

## தமிழரசுக்கட்சி...

வுக்கு எதிராகக் கூட்டு எதிரணியினரால் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி தனது ஆதரவை வழங்காது என அறிவித்துள்ளது. இது குறித்து எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்துள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன், "கூட்டு எதிரணியினரால் கொண்டுவரப்படும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எமது கட்சி எக்காரணம் கொண்டும் கையொப்பமிடாது. அத்துடன், இந்தப்பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் போது அதற்கு ஆதரவாக எமது கட்சி வாக்களிக்கப் போவதுமில்லை" எனத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள் ளார். இருப்பினும், இந்த விவகாரத்தில் அரசாங்கத்தை முழுமையாகக் கைவிடப் போவதில்லை என்பதை உணர்த்தும் வகையில் பேசிய அவர், 'நாடாளுமன்றத்தில் இப்பிரேரணை மீதான விவாதம் நடைபெறும் போது எமது கட்சி அதில் தவறாமல் பங்கேற்கும் . அந்த விவாதத்தின் போது, நீர்கொழும்பு சிறைச்சாலைச் சம்பவம் உட்பட நாட்டின் ஒட்டுமொத்த சிறைச்சாலைத் கட்டமைப்பிலும் நீண்டகாலமாக நிலவி வரும் கடுமையான குறைபாடுகள் மற்றும் சீர்திருத்தங்கள் தொடர்பிலும் நாடாளுமன்றத்தில் எமது கட்சி சுட்டிக்காட்டும்' என்றும் சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார். (அ- இ)

# வியட்நாமில் படகு கவிழ்ந்து 15 இந்தியர்கள் உயிரிழப்பு

ஹனோய்,ஜூலை 13

வியட்நாமின் புகழ்பெற்ற சுற்றுலாத்தலமான புகுவோக் தீவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் படகு கவிழ்ந்ததில் 15 இந்திய சுற்றுலாப் பயணிகள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். 36 பேருடன் சென்ற அந்தப் படகில் 32 இந்திய சுற்றுலாப் பயணிகள், 3 பணியாளர்கள் மற்றும் ஒரு உதவியாளர் பயணம் செய்துள்ளனர். இந்த விபத்தில் 21 பேர் உயிர் பிழைத்துள்ளனர். விபத்து குறித்து வியட்நாமில் உள்ள இந்தியத் தூதரகம் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துள்ளதுடன், பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உதவ ஹோ சி மின் நகரம் மற்றும் ஹனோயில் அவசர கால உதவி மையங்களை நிறுவியுள்ளது. (ச-இ)

# அமெரிக்கா நட்பு நாடுகள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல்


தெஹ்ரான்,ஜூலை 13

அமெரிக்கா - ஈரான் இடையே மீண்டும் மோதல் மீண்டும் வெடித்துள்ள நிலையில் ஈரான் மீது அமெரிக்கா மீண்டும் தாக்குதலை தொடங்கி உள்ளது. அதற்கு ஈரான் பதிலடி கொடுக்கும்வகையில் அமெரிக்காவின் இராணுவத் தளங்கள் உள்ள பஹ்ரைன், கட்டார், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் குவைத் நோக்கி ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலை நடத்திவருகின்றது. இருநாடுகள் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தான நிலையில் கடந்த வாரம் முதல் மீண்டும் மோதல் தொடங்கியது. இந்த நிலையில் ஹோர்மூஸ் ஜலசந்தியில் 'சைப்ரஸ்' நாட்டின் கொடியுடன் பயணித்த கப்பல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது. இந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாக ஈரான் மீது அமெரிக்காவின் படைகள் தாக்குதல் நடத்தின. இதனால் ஈரான் கடும் கோபமடைந்தது. அமெரிக்காவுக்கு உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று ஹோர்மூஸ் ஜலசந்தியை மீண்டும் மூடியதோடு, அமெரிக்காவின் இராணுவத் தளங்கள் உள்ள நாடுகளை நோக்கி ஈரான் நேற்றுத் தாக்குதலைத் தொடங்கியுள்ளது. ஈரானின் அருகே உள்ள அமெரிக்காவின் நட்பு நாடுகளான கட்டார், ஐக்கிய அரபு அமீரகம், குவைத் மற்றும் பஹ்ரைன் உள்ளிட்ட நாடுகளை நோக்கி ஈரான் ஏவுகணை மற்றும் ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தி வருகிறது. (ச-இ)

# முன்னாள் மன்னர் கட்டாரில் மறைவு

தோஹா,ஜூலை 13


கட்டாரின் முன்னாள் மன்னரான ஷேக் ஹமட் பின் கலீபா அல் தானி தனது 74ஆவது வயதில் காலமாகியுள்ளார்.



18 ஆண்டுகளாக அரசராக இருந்து, சிறிய, வளைகுடா நாட்டை உலக அளவில் பல்வேறு துறைகளிலும் முன்னணி நாடாக வளம் பெறச் செய்த அவர், 2013 ஆம் ஆண்டு ஜூனில் மகனிடம் ஆட்சியை வழங்கி விட்டு ஒதுங்கினார் என்பது குறிப்பிட்டார். (ச-இ)

# மரண அறிவித்தல்

மலர்வு 18 . 08 . 1935



உதிர்வு 11 . 07 . 2026

## கந்தர் சின்னையா

(ஓய்வு நிலை கிராம சேவகர் -கொயிலாமனை கொடிகாமம்)

மந்துவிலை பிறப்பிடமாகவும் கொயிலாமனை கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் சின்னையா அவர்கள் 11.07.2026 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசாத்தியின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), விக்னராசா (இலண்டன்), கலைவாணி (ஆசிரியை - யா/ சுன்னாகம் றோ.க.த.பா), காலஞ்சென்ற விக்கினதாஸன் மற்றும் கலையரசி (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும், கமலாவதி (ஜேர்மனி), காலஞ்சென்ற சுயதினி மற்றும் உதயகுமாரன், விநோதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், திசாந், திலக்ஷன், வைஸ்ணவன், சௌமியன், கதீஸ்சன், நிதர்சன், தர்சிகன், மதுசன், சுஜீதா, பேரீசன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், சின்னத்தம்பி, சுப்பிரமணியம், ஆறுமுகம், செல்லம்மா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2026) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணிக்கு கட்டை பறித்தான் கொயிலாமனை கொடிகாமம் இந்து மயானத்தில் அவரது பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
076 488 5485

(er 039) N

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மரண அறிவித்தல்



பிறப்பு 12.10.1955

இறப்பு 12.07.2026

### கதிரவேலு தவமணி

**(டயானா பிளாஸ்டிக்)**

பூந்தலோயா நுவரெலியாவை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு தவமணி நேற்று (12.07.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2026) திங்கட் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியை களுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**30/27, மூத்த விநாயகர் வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**(டயானா பிளாஸ்டிக்)**
**076 997 8857**

(CS 32148)A

## நீங்கா நினைவலைகள்

15ஆம் ஆண்டு 16ஆம் ஆண்டு





பிறப்பு 05.02.1933

இறப்பு 30.06.2011

பிறப்பு 04.06.1935

இறப்பு 16.08.2010

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்

**திதி: அபரபக்க சதுர்த்தசி (13.07.2026)**

(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன முன்னாள் உத்தியோகத்தர்)

உங்கள் இருவரையும் தேடி ஊர் உலகம் தேடி
நாயாய் அலைகின்றோம் எப்போ கிடைப்பீர்கள்?
யாரைக் கேட்கிறது எங்கே ஆறுவோம்?

அம்மாவின் பிரிவுத்துயர் தாழாமல்
அவரோடு நீங்களும் சென்றது ஏன் தொடர்ந்து?
உங்கள் திருமண தினத்தன்று
அக்கினியில் நீங்கள் செய்துகொண்ட
சத்தியம் தான் காரணமோ?

வேதனைகள் வேர் வரை சென்றாலும்
விழுதுகளாய் எம்மைத் தாங்கினீர்கள்!
உங்கள் இருவரின் குரல் கேட்காமல்
பரிதவிக்கும் எங்கள் குமுறல்கள்
உங்கள் காதுகளில் கேட்கிறதா?

ஊர் விட்டு வந்து நம் சொந்த ஊருக்கு
திரும்ப முடியாமல் தவித்த தவிப்பும்
இப்போ ஊருக்கு போக நிலை வந்தும்
போவதற்கு நீங்கள் இல்லையே அப்பா....

உயரங்கள் நாம் காண எம்
வாழ்க்கைப் பயணத்தில் துணையாய் இருந்த
ஈரிரண்டு கண்களையும் கண்கெட்ட
எமனுக்கோ பொறுக்கவில்லை

நாள்கள் வாரமாகி வாரங்கள் மாதமாகி
மாதங்கள் ஆண்டாகி போனாலும்
ஆறவில்லை எங்கள் துயர்

உங்கள் வார்த்தைகள் எம்மை வாழவைக்கும்
உங்கள் நினைவுகள் எம்மை வாழ்த்திடும்

### திருமதி பாக்கியம் பூபாலசிங்கம்

**திதி: பூர்பக்க அட்டமி (21.07.2026)**

அம்மா நீ சென்ற கணமும்
அம்மா நீ சொன்ன வார்த்தைகளும்
அம்மா நீ செய்த உன்னதங்களும்
அம்மா நீ தந்த நெறிகளும்
எம் நெஞ்சினில் என்றும் அழியாதம்மா
எழுகின்ற கேள்விகளுக்கெல்லாம்

நாளும் விடை தேடுகின்றோம் அம்மா!
எங்கள் வலிகளைத் தாங்க
யாருமே இல்லையம்மா
அப்பா அம்மா இல்லாத
அநாதைகளானோம் அம்மா
அந்த இறைவனே கண்ணீரைப் பரிசாகத் தந்து
மௌனம் காணுகின்றார் அம்மா

அன்பு அம்மாவே!
கொடிய நோய் வடிவில் காலன்
கொன்றுவிட்டானே உங்களை
அன்று மாலைவரை நீங்கள் புரிந்த அன்பு மழை
இன்னும் எம் கண்முன்னே வந்து செல்லுதம்மா.....

நாடு கடந்து வந்து நாம் உங்களைக் கண்டு
நாளும் பொழுதும் மகிழ்ந்து இருந்த கணங்களும்
மருமகளையும், பேரப்பிள்ளைகளையும்
நீ கொஞ்சிக் குலாவிய தருணங்களும்
என்றும் உங்களை நினைவூட்டுகின்றது அம்மா......

நீங்கள் எனக்காக கட்டிய வீடு
இன்று பாலைவனமாய் கிடக்கின்றது
நீங்கள் இன்று இருந்திருந்தால்
நீங்களாவது அந்த வீட்டில் இருந்திருப்பீர்களே அம்மா...
உயிரைத் தந்து உடலில் சுமந்து
உலகில் வாழ உருவம் தந்த
தெய்வம் நீயம்மா!

**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!**

**மாதகல் மேற்கு,**
**மாதகல்.**

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**
மகன் - **077 774 3185**

## மரண அறிவித்தல்



**மலர்வு**
**05.01.1946**

**மறைவு**
**11.07.2026**

### திருமதி அகிலேஸ்வரன் லோகேஸ்வரி

**(முன்னாள் உபதபாலதிபர் - தட்டையன்புலம்)**

புங்குடுதீவு 7ம் வட்டாரம், வர தீவை பிறப்பிடமாகவும், பாண்டியன்தாழ்வு சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அகிலேஸ்வரன் லோகேஸ்வரி அவர்கள் கடந்த 11.07.2026 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - பராசக்தி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - நல்லதாங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற அகிலேஸ்வரன் (காந்தி) அவர்களின் அன்பு மனைவியும், விஜிதா (விஜி - யாழ்ப்பாணம்), அமல்ராஜ், சர்மிளா (சூட்டி, யாழ்ப்பாணம்), ராகுலன் (றொசான் - லண்டன்), சௌத்ரி (பிரசன்னா - லண்டன்), கஜேந்தரின் (சுமன் - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேந்திரன், பாலசிவராம் (ஆசிரியர், அச்செழு மெதடிஸ் மிஷன், தமிழ் கலவன் பாடசாலை), சுகிர்தா (சுதா - லண்டன்), கவிதா (லண்டன்), யசோதரை (யசோ - லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கால்சென்ற இராஜசிங்கம் (தபால் ஊழியர்), ஸ்ரீராகினி (பபி-சுண்டுக்குளி), ரவிதாஸ் (சுண்டிக்குளி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், வேதாரணியம்பிள்ளை, கனகாம்பிகை, யோகாம்பிகை மற்றும் தண்டாயுதபாணி (ஓய்வுபெற்ற கிராம அலுவலர் - வட்டக்கச்சி), தர்மபாலசிங்கம் (யாழ்ப்பாணம்), தர்மாம்பிகை (லண்டன்), காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் விமலச்சந்திரன், காலஞ்சென்ற இந்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கேமதுசன், கிந்துசன், டர்மிகா, யுகான், தஷாங்கிதா ஆகியோரின் ஆசைமிகு அம்மம்மாவும், அட்ஷயன், சாத்வீகன், சுருதிகா, ஆருகா, ஆருகன் ஆகியோரின் ஆசைமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**123, கொழும்புத்துறை வீதி,**
**பாண்டியன்தாழ்வு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் : குடும்பத்தினர்.**
**076 7935 809**
**070 2530 417**

(CS 32144) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.